தொகுதி 9.] 1930ஞு அக்டோபர்மீ 1வ [பகுதி 9.

6 NOV 1930

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

தனிசாமி முதலியார்,
சென்னை.

ம னே மோ கி னி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 4-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு „ 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தரீ	„	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	„	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	„	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	„	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	„	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

6-NOV 1930

அவள் நிமிர்ந்து நோக்கியபோது உட்கார்ந்திருக்கும் ஒரு வாலிபனுக்குப் பதிலாக ஒருவன் மல்லாக்கப் படுத்திருப்பதைக் கண்டு சற்று அருகில் சென்று பார்த்தாள். அங்கு படுத்திருக்கும் வாலிபன் சவமாய்க் கிடப்பதையும் அவன் மார்பில் ஒரு ஈட்டி நாட்டப்பட்டிருப்பதையும் கண்டதே அவள் மனதில் பெருங்கலவரமும் சந்தேகமும் பீதியு முண்டாய்விட்டது. ஏற்பாட்டின்படி அங்கு அச்சமயம் இருக்க வேண்டியவன் தன் புதல்வனே யென்றும் அவன் மடிந்து கிடப்பவன் வயதளவே யிருக்கவேண்டுமென்றும் அவள் நினைவிற்கு வந்தபடியால் அங்கு குரூரமாய்க் கொலை செய்யப்பட்டவன் தன் புத்திரன்றானோ வென்ற சந்தேகம் தோன்றிவிட்டபடியால் அவள் மனதில் ஒன்றும் தோன்றாத வேதனை யுண்டாய்விட்டது. புத்திரசோகம் யாரைத்தான் விட்டது. "கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேற் காதல்" எனின் சாதாரணமான ஒரு பெண்பிள்ளை அதைச் சகிக்கமுடியுமோ? அவ்வேதனையைப் பொறுக்கமுடியாது கால தேசாதிகளையும் மறந்து கோவென்று வீறிட்டலறிப் பெருங் கூச்சலிட்டுவிட்டாள். அச்சமயம் காற்று மும்முறமாய் வீசிக்கொண்டிருக்கவில்லை. ஆகையால் அச்சத்தத்தை யடக்கக்கூடிய வேறு சத்தம் ஒன்றுமில்லை. ஆகவே அவள் போட்ட சத்தத்தால் அப்பாலமே அதிர்ந்து விடுவதுபோலிருந்ததோடு அச்சத்தம் குகைபோன்ற அப்பாலத்தின் கண்ணைவிட்டு வெளிப்பட்டுப் பாலத்தின்மேல் சற்று தூரத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்த இளவரசனுக்கும் தானப்பனுக்கும் கேட்டு அவர்களைத் திடுக்கிட்டு நடுங்கச் செய்தது.

18650.

92 - வது அத்தியாயம்

மேற்குப்பாலத்தில் மேற்கண்ட சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும் அதே சமயம் இராஜ அரண்மனையில் சண்பகவல்லி இராஜகுமாரி மிக்க வருத்தமான அனுபவத்திலிருக்கிருள்.

இரவு சுமார் பத்துமணிக்கு அவள் தன் தாயாருக்கு ஒரு நீண்ட கடிதமெழுதத் தொடங்கினள். முன்னள் சுந்தராங்கி இளவரசியின் விஷயத்தைப்பற்றி விசாரிப்பதற்காக ஜகதீசனை வரும்படி கடிதம் எழுதுவதாகக் கூறியிருக்கிருளல்லவா? ஆகையால் சண்பகவல்லி தன் மனதில் உண்டான கோரிக்கைப்படி ஜகதீசன் தன் அத்தையின் கடிதத்தைக் கண்டதும் கட்டாயம் கந்தபுரியிலிருந்து வந்து விடுவானென்றும், வந்து தன் தாயார் விஷயமாய் நடந்து கொண்டிருக்கும் சதியாலோசனைகளைப் பற்றிய நடவடிக்கைகள் யாவும் விவரமாய்க் கூறிவிட்டு, பிறகு தன் அத்தையின் கோரிக்கைப்படி தன் தாயாருக்கு உதவிசெய்து அவளை யந்த ஆபத்தினின்றும் காப்பாற்றுவதற்காக உடனே புறப்பட்டுத் தன் தாயிருக்கும் காட்டிற்குச் செல்வானென்றும் நம்பிக்கொண்டாள். ஆகையால் அவன் வசம் தன் தாயாருக்குக் கடிதம் கொடுத்தனுப்பினல் அவளைச் சூழ்ந்திருக்கும் வேவுகாரரிடம் அது அகப்படாமல் நேராய்த் தன் தாய் கையில் சேருமென்றும், அதோடு தான் இரகசிய விஷயம் எதையும் எழுத அஞ்சாமல் எல்லா விஷயங்களையும் விபரமாய்த் தாராளமாய் எழுதலாமென்றும் கருதினள். அவள் தன் தாய்க்குக் கடிதமெழுதி சிலகாலமாய்விட்டபடியால் மிக்க அன்போடும் ஆவலோடும் அக்கடிதத்தை யெழுதத் தொடங்கினள்.

[illegible]

சண்பகவல்லி உட்கார்ந்து தன் கடிதத்தை யெழுதி முடிக்க ஒருமணி நேரமாயிற்று. அப்போது மணி சரியாய்ப் பதினொன்றடித்தது. புயல்காற்று பயங்கரமாய் வீசிக்கொண்டிருக்கிறது. மழையும் வேகமாய்ப் பெய்துகொண்டிருக்கிறது. வானம் இருள் நிறைந்து பயங்கரமா யிருந்தது. தான் வசிக்கும் அந்த அரண்மனையில் பல காலங்களில் பலவித அபூர்வ நடக்கைகளும் அக்கிரமமும் கோரமுமான சம்பவங்களும் நேர்ந்திருக்கின்றன வென்று அவள் பன்முறை பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறாள். அச்சமயம் அவள் மனதில் அந்த நினைப்புவந்தது. உடனே தான் இருக்கும் விசாலமானதும் மிக்க உன்னதமாய் அலங்கரிக்கப்பட்டதுமான அந்த அறையின் நாற்புறங்களையும் சுற்றி நோக்கி "ஹா! இந்த அறையில் எப்போதேனும் இரத்தம் சிந்தப் படும் காரியம் நடந்திருக்குமோ" வென்று நினைத்தாள்.

உடனே அவளை யறியாமலே ஒரு காரணமும் தோன்றாமல் அவள் மனதில் ஒருவித திகிலும் பயங்கரமும் உண்டாயிற்று. அவள் மிக்க மிரட்சி யடைந்த பார்வையோடு மறுபடி அந்த அறையின் நாற்புறங்களையும் நான்கு மூலைகளையும் உற்று நோக்கினாள். அந்த அறையோ மிக்க பணச்செலவு செய்து பார்ப்போர் கண்களைப் பகட்டும் வண்ணமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்த மேஜை நாற்காலி சோபா முதலிய சாமான்களெல்லாம் சந்தனமரம் முதலிய விலையுயர்ந்த மரங்களால் செய்யப்பட்டு, முத்துச்சிப்பி பொற்கம்பிகள் பொற்றகடுகள் முதலியவற்றால் அதிசயமான சித்திர வேலைகள் செய்து அமைக்கப்பட்டிருந்தன. அறையின் நாற்புறங்களிலும் விலையுயர்ந்த பட்டில் பொற்சரிகையில் சித்திரவேலை செய்யப்பட்ட திரைச்சீலைகள் விடப்பட்டிருந்தன. அப்படி யிருந்தும் அச்சமயம் அந்த அறை பல வருடங்கள்

மூடப்பட்டிருந்த அறைபோல் அவள் கண்களுக்குப் பயங்கரமாய்த் தோன்றியது.

அச்சமயம் அவள் மனம் பூரண துக்ககரமான நிலைமையிலிருந்தது. துக்கத்திற்கு அவளுக்குப் பல காரணங்களுண்டு. தன் தாயார் நிரபராதியா யிருந்தும் மிக்க அநீதமாய் நடத்தப்படுகிறுள் என்பது மட்டுமல்ல. தான் பிறந்தது இராஜ குடும்பமேயாயினும், அக்குடும்பத்தில் ஒவ்வொருவரும் அயோக்கியர்களென்றும், பெரும் பாதகத் தொழில்களைச் செய்தவர்களென்றும் அவள் நன்றாய்க் கேள்விப்பட் டிருக்கிறுள். ஆகையால் தான் இருக்கும் அதே அறையில்கூட கொலைகள் நடந்திருக்கும், அந்த இரத்தக் கறைகள் இன்னும்கூட சுவர்களிலும் தரையிலும் இருக்கும் என்றும் அவள் மனதில் பட்டது.

சண்பகவல்லி யத்தகைய பயமடைந்த நிலைமையி லிருக்கும்போது மும்முரமாய் வீசிய காற்றுல் அம்மாளிகையே யதிர்ந்துவிட்டதுபோ லிருந்தது. அதனுல் அவள் பீதியதிகரித்துவிட்டது. மனக் கலவரம் அதிகமாய்விட்டது. அவளால் பொறுக்க முடியாமல் தன் தோழிகளை யழைக்கக் கருதினுள். ஆனுல் தான் அவர்களைப்போய் சயனித்துக் கொள்ளும்படி கூறிவிட்டிருப்பதால் மறுபடி யழைக்கலாகாதென்று கருதி மனதைத் தன்னுல் கூடியவரையில் சமாளித்துக்கொண்டு உட்கார்ந்தாள். ஆனுல் அவளால் முடியவில்லை. ஏதோ ஒரு பெரிய திகில் அவளை யறியாமல் அவள் மனதில் பற்றியது.

ஆகையால் தன் அறைக்கு அருகிலுள்ள அறையில் இருக்கும் புஷ்பாங்கி என்ற மூதாட்டி அசௌக்கியமா யிருப்பதால் அங்கு போகலாம் என்று கருதினுள். ஏனெனில் அச்சமயம் தான் ஒரு துணையோடு இருந்தால் இந்த மனக்

கலக்கம் ஒழியுமென்று கருதினுள். வெளிக்கு அம்மூதாட்டி யின் தேக சுகத்தைப்பற்றி விசாரிக்க வந்ததுபோல் அபி நயிக்கலாம் என்பது அவள் கருத்து.

புஷ்பாங்கி யென்ற மாது இராணியின் படுக்கையறைத் தோழிகளில் ஒருத்தி. அவள் நடக்கைகளைப் பற்றிப் பல வதந்திகளுண்டு. அதோடு ஊர்ச் சங்கதிகளைப் பேசுவதில் அவள் மிக்க அக்கறை யுடையவள். ஆனல் யாருக்கும் நல் லவளாகவும் யாவரிடத்தும் அன்புடையவளாகவும் நடந்து கொள்பவள். அவளுக்கு வயது நாற்பதிற் கதிகமாயிற்று. சண்பகவல்லிக்கு அவள்மேல் எப்போதும் பிரியம். அம் மூதாட்டியின் அறை சண்பகவல்லியின் அறையிருக்கும் அதே தாழ்வாரத்தின் கோடியிலிருக்கிறது. ஆனல் அவள் அறைக்கும் சண்பகம் அறைக்கும் இடையில் வேறு சில தோழிகளின் அறைகளும் அதே தாழ்வாரத்தி லிருக்கின் றன.

சண்பகம் தன் அறையைவிட்டுப் புறப்பட்டு தீபங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தாழ்வாரத்தைக் கடந்து அதன் கோடியிலுள்ள வெளியறையை மெதுவாய்த் திறந்து உட்சென்ருள். அதற்குள் இருக்கும் அறையிற்ருன் புஷ் பாங்கி இருப்பது. சண்பகம் அந்த அறையின் கதவைத் திறக்க வெண்ணி அதனருகிற் சென்றபோது உள்ளே இரு வர் பேசும் சத்தம் கேட்டு "ஆ! நாம் இப்போது செல்வது ஒழுங்கல்ல" என்று எண்ணி உடனே திரும்பிவிட முயன் ருள். ஆனல் அச்சமயம் உள்ளே யிருந்து ஒரு வார்த்தை, ஒரு மனிதரின் பெயர் அவள் செவியிற் கேட்டது. உடனே யவள் திடுக்கிட்டுப் பிரமித்து மரம்போல் அங்கே நின்றுவிட் டாள். அதோடு பின்னல் என்னசங்கதி வெளியாகிறதோ அதைக் கேட்கவேண்டும் என்ற ஆவலும் அவள் மனதில்

உண்டாயிற்று. அவள் இருக்கும் அறையில் தீபம் எரிந்து கொண்டிருந்தது. இரண்டறைகட்கும் இடையில் உள்ளறையின் கதவுக்குப் பின் ஒரு தடித்த திரை விடப்பட்டிருந்தது. அதோடு அந்த அறையில் கதவும் கொஞ்சம் திறந்தேயிருந்தது. ஆகையால் சண்பகவல்லி யிருப்பதை உள் அறையிலிருப்போர் காணமுடியாதேனும் அவள் மட்டும் அவர்கள் சம்பாஷணை முழுமையும் நன்ருய்க் கேட்கலாம். அதோடு பிரியப்பட்டால் அந்த அறைக்குள் இருப்பவர்களேயும் கண்ணுல் காணலாம்.

சண்பகவல்லியின் செவியில் விழுந்த பெயர் சீனன் என்பதே. அதைக் கூறியது புஷ்பாங்கியே யென்றும் அவளோடு அச்சமயம் பேசிக்கொண்டிருப்பவள் பெரியநாயகி என்பவள் என்றும் இராஜகுமாரி யறிந்துகொண்டாள். பெரியநாயகியும் அங்குள்ள இராணியின் தோழிகளில் ஒருத்தியேயாகும். முன்பு சில சமயங்களில் அவர்களிருவரும் ஏதோ இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருப்பதை சண்பகம் கண்டிருக்கிருள். அதுமுதலே இவர்கள் இப்படி பேசுவது என்னசங்கதி யென்றறிய வேண்டுமென்று அவள் மனதில் மிக்க ஆவலுண்டா யிருந்தது. ஆகையால் இப்போது வசதியான சமயம் தற்செயலாய்க் கிடைக்கவே தன் மனதிலிருந்த கலக்கம் பீதி யாவும் மறந்து, இருவர் பேசும்போது இம்மாதிரி ஒளிந்திருந்து கேட்பது யோக்கியமல்ல வென்கிற புத்தியையும் மறந்து வாசற்படி யருகில் நின்று அவர்கள் சம்பாஷணையை ஒத்துக்கேட்டாள். கீழ்க்கண்ட சம்பாஷணை அவள் செவிகளில் விழுந்தது:—

பெரியநாயகி:—“நீ வைசிங்கம் கோமகன்மேல் கொஞ்சம் வெறுப்பு கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆனல் நீ கேட்பார் பேச்சு கேட்டு அவர்மேல் நியாயமின்றி

விரோதங் கொள்ளவில்லை யென்று நினைக்கிறேன்'' என்றாள்.

புஷ்பாங்கி:—ஆ! பெரியநாயகி நீ என்னைப்பற்றி அப்படி கூறுவதற்காக நான் மிக்க வியப்படைகிறேன். எனக்கு அந்த இளவரசன்மேல் வெறுப்பு வெறுப்புத்தான். ஏனெனில் அவனுடைய நடக்கைக்காக; ஆனால் ஒருவர் மேல் இல்லாத குற்றத்தை நான் சுமத்துகிறவளல்ல.

பெரியநாயகி:—ஆ! உன்னுடைய குணம் எனக்குத் தெரியாததல்ல. நீ யம்மாதிரி செய்பவளல்லவென்று நான் அறிவேன். இந்த இராஜ அரண்மனையில் நடக்கும் மர்மமான விஷயங்களை நன்கறிந்தவள் உன்னைப்போல் வேறு ஒருவருமில்லை.

புஷ்பாங்கி:—ஆம், உண்மையே. நீ கூறுகிறபடி நான் கருதினால் சில சங்கதிகளைக் கூறக்கூடும். ஆனால் சில சங்கதிகள் இருக்கின்றன, அவைகளைப்பற்றி மட்டும், என்ன நேர்ந்தாலும் நான் வாய் திறக்கவே மாட்டேன்.

பெரியநாயகி:—இப்போது நான் சினனைப்பற்றி யுன்னைக் கேட்டபோது உன் இரகசியத்தை யறிந்துகொள்ள வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடல்ல. அக் கோரமான துக்க சம்பவம் நடக்கும்போது நான் ஊரில்லை. அப்போது என் தேக சுகத்திற்காக என் கணவன் என்னை மலைநாட்டின் ஒரு மூலையில் கொண்டு போய் வைத்திருந்தார் என்ற சங்கதி நீ யறிந்ததே.

புஷ்பாங்கி:—ஆம், ஆம்; நினைப்பிருக்கிறது. அச்சம்பவம் நடக்கும்போது நீ யிங்கில்லை யென்று தெரியும். நடந்த அக்கோர சம்பவம் பிரசுரிக்கப்பட்ட பத்

திரிகைகளை நான் உனக்குத் தபாலில் அனுப்பிய போது உன் கணவர் அச்சமயம் நீ மிக்க இருதய பலஹீனமுடைய நிலைமையிலிருந்தபடியால் அத்தகைய சமாசாரங்களை யுனக்குத் தெரிவிக்க வேண்டாமென்று எழுதினது எனக்கு நினைப்பிலிருக்கிறது.

பெரியநாயகி:—ஆகையால் நடந்த கோரசம்பவத்தின் பெரும்பாகம் எனக்குத் தெரியாது. நான் நகரத்திற்குத் திரும்பிவந்தபோது அழகாம்பாள் இராஜகுமாரியின் மரணமே எங்கும் பெரும் பிரஸ்தாபமா யிருந்தது. சீனனுடைய கோர சமாசாரத்தைப்பற்றி ஒருவரும் பேசவில்லை. ஆகையால் அன்று நாம் பேசிக்கொண் டிருக்கையில் நீ யெதற்காகவோ தற்செயலாய் அவன் பெயரைக் கூறும் வரையில் அச்சங்கதி யென் மனதிலிருந்து மறந்துபோ யிருந்தது. அப்போதுதான் அச் சம்பவத்தைப் பற்றிய யாவும் கூறும்படி நான் உன்னைக் கேட்டேன். நீ யப்படியே சம்மதித்துக் கூறத்தொடங்கும் சமயத்தில் ஏதோ சந்தர்ப்பத்தால் நமது சம்பாஷணை தடைப்பட்டு விட்டது.

புஷ்பாங்கி:—ஆம் ஆம். நினைப்பிருக்கிறது. அன்று சாளரத்தருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம் அச்சமயம் இராஜகுமாரியாகிய சண்பகவல்லி தாழ்வாரத்திலிருந்தபடியால் ஒருவேளை நாம் பேசுவதை ஒத்துக் கேட்பாளென்று அஞ்சி அப்பேச்சை நிறுத்தி விட்டேன்.

பெரியநாயகி:—சரிதான். இப்போது நாம் இருவருமே இங்கிருக்கிறோம். அனுகூலமான சந்தர்ப்பமாகவுமே யிருக்கிறது. இப்போது நாம் இங்கு பேசுவதைக் கேட்

போர் ஒருவருமில்லை. ஆகையால் என் ஆவலை யிப்போ தேனும் பூர்த்தி செய்வாயென்று நம்புகிறேன்.

அதன்மேல் புஷ்பாங்கி "எனக்கொரு ஆக்ஷேபனையு மில்லை. ஆயினும் இத்தகைய விஷயங்களைப் பேசும்போது சுவர்களுக்கும் செவிகளிருக்கும் என்று அஞ்சிப் பேசவேண் டும்" என்று கூறிவிட்டுச் சற்று நிதானித்துப் பிறகு தாழ்ந்த குரலாய்க் கீழ்க்கண்டபடி கூறத் தொடங்கினாள்:—

"இப்போது நான் கூறப்போகும் சம்பவங்கள் நடக் கும் காலத்தில் இராஜகுமாராகிய வைரசிங்கம் கோமகன் இராஜ அரண்மனையில் இப்போதவர் வசிக்கும் அறைகளி லேயே வசித்துக்கொண் டிருந்தார் என்பதை நீயும் அறிவா யல்லவா. நான் கூறப்போகும் கோரசம்பவம் நடந்து நான்கு வருடங்களாயின. அப்போது அந்தக் கோமகனிடம் சீனன் என்பவனோடு நீலகண்டன், ஜெயராம் என்ற இருவருங்கூட கையாட்களா யிருந்தார்கள். அவர்கள் வாரத்திற் கொருவ ராய் முறை யேற்படுத்திக்கொண்டு வேலைசெய்து வந்தார் கள். சீனன் என்பவன் மலையாளத்தான். அவன் குட்டை யாய்த் தேகக் கட்டுடையவனாய் அழகுடையவனா யிருந் தான். அவனுக்கு மனைவியும் நான்கு குழந்தைகளு முண்டு; நல்ல நேர்மையான நடக்கை யுடையவன்; குடும்பத்தில் எப் போதும் பட்சமாய் நடந்து கொள்பவன்.

அவன் மனைவி மிக்க அழகுடையவள். அவள்மேல் மிக்க அன்பு வைத்திருந்தான். குழந்தைகள் மேலும் அவ னுக்கு மிக்க காதலுண்டு. எந்தக் குழந்தைக்காவது அசௌக் கியம் நேர்ந்தால் அவன் முகவாட்ட மடைந்து உடனே துயரக்கடலி லாழ்ந்துவிடுவான். அக்குடும்பமே மிக்க சந் தோஷ முடையது. அவன் ஒருவர்க்கும் தீங்கு செய்யத் தக்கவனல்ல. அதற்கு மாறாக சமயம் நேரும்போதெல்

லாம் யாருக்கும் சகாயம் செய்யும் குணமுடையவன். அவன் தன் எஜமானனுக்கு மட்டுமல்ல இராஜ குடும்பத்திலுள்ள யாவர்க்குமே நல்லவன். யாவரும் அவனைப் பக்ஷமாகவே நடத்துவார்கள். அவர்கள் அவனுக்குப் பல பரிசளிப்ப துண்டு. இது எவ்வளவு தூரத்திற்குச் சென்றதென் றால் இராஜ குமாரிகளில் ஒருவளாகிய அமிர்தவல்லி என்பவ ளும் அவன்மேல் அன்புடையவளாகி அவனுடைய கடைசி குழந்தையைத் த்ன் வளர்ப்புக் குழவிபோல் நடத்தத் தொடங்கினுள். இது மட்டுமல்ல, எல்லா வேலைக்காரர்களும் அவனவன் முறை காலத்தில் மட்டுமே அரண்மனை யில் படுக்க இடமுண்டு. ஆனுல் சீனனும் அவன் குடும் பமும் மட்டும் சமையல் கட்டிற்கு முன்னுள்ள முதல் வாயிற்படியி னருகிலிருக்கும் அறைகளில் வசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த அறைகளிலிருந்து வைரசிங்கம் கோமகனுடைய அறைகளுக்குச்செல்ல பாதையுண்டு. அமிர்த வல்லி இராஜகுமாரி தன் சகோதரனுகிய அக்கோமகனைக் காணச் சென்று திரும்பிவரும்போது சீனன் குடும்பம் இருக் கும் அறைகளில் நுழைந்து சற்றுநேரம் அவன் குழந்தைக ளோடு கொஞ்சி விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். அவ னுக்கு யாவரும் கொடுக்கும் பரிசுகளால் மற்ற வேலைக்காரர் களைக் காட்டிலும் அவன் மிக்க நிம்மதியாகவும் க்ஷேமமாக வுமே யிருந்தான்.

பெரியநாயகி:—அவன் சரியான புத்தி சுயாதீன முடையவன் றுனே?

புஷ்பாங்கி:—அவன் புத்தி சுயாதீனத்தில் ஒரு குறைவு மில்லை. அவன் மிக்க சிக்கனமாகவும் மனத் திருப்தி யோடும் எப்போதும் சந்தோஷமாகவும் இருப்பவன்.

பெரியநாயகி:—அப்படியானல் அவன் மிக்க யோக்கியமான நல்ல மனிதனே.

புஷ்பாங்கி:—கண்டிப்பாய் மிக்க நல்ல யோக்கியமான மனிதன். நான் இதுவரையில் முன்னடி கூறவேண்டிய விவரங்களைப்பற்றி அவசியமான வரையில் கூறிவிட்டேன். இனி சீனன் பெயர் நாடு முழுமையும் பகிரங்கமான அக்கோர சம்பவம் நடந்த விவரத்தைக் கூறுகிறேன்.

நான்காவது வருடம் வசந்த காலத்தில் ஒருநாள் முன்னேரத்தில் சீனனும் அவன் மனைவியும் இராஜ மாளிகையிலுள்ள உத்தியான வனத்தில் உலவிக்கொண் டிருந்தார்கள். அவன் வழக்கம்போல் சந்தோஷமாகவே மறுநாள் மாலை தன் மக்களின் ஒன்றினுடைய பிறந்த வருடக் கொண்டாட்டத்திற்காக விருந்து வைப்பதைப்பற்றி மனைவியோடு பேசிக்கொண்டிருந்தான்.

அன்று மாலை மூன்று மணிக்கு அவர்கள் போஜன மருந்தியபோதும் சீனன் வழக்கம்போல் நல்ல பசியோடு திருப்தியோடு சாப்பிட்டான். போஜன மருந்தியதும் அவன் குழந்தைகளில் ஒன்று திடீலென்று அசௌக்கிய மடைந்தது. உடனே வைத்தியர் வரவழைக்கப்பட்டார். வியாதி அப்படி அபாயகாமானதா யிராவிட்டாலும் சீனன் புத்திர வாஞ்சையால் இராத்திரிக்குக் குழந்தைகள் தன் அறையிலேயே சயனிக்கட்டுமென்று ஏற்பாடு செய்தான். அவன் வைரசிங்கம் இராஜகுமாரன் அறைகளுக் கருகிலுள்ள ஒரு அறையில் சயனித்துக் கொள்வது. அவன் மனைவியும் அந்த ஏற்பாட்டிற் கொப்புக்கொண்டதால் சீனன் அந்த அறை சரியான நிலைமையி லிருக்கிறதாவென்று பார்ப்பதற்காக மாலை சுமார் ஏழுமணிக்கு அங்கு சென்றான். உண்மை

யென்னவெனில் அன்று அவன் வேலை செய்யவேண்டிய முறையல்ல. அன்று நீலகண்டன் முறை. ஆகையால் சீனன் முறையில்லாத நாட்களில் தன் குடும்ப வாசஸ்தலத்தில் சயனித்துக்கொள்ள வேண்டியவனுனதால் அன்று அவன் அங்கு சயனித்துக் கொள்வானென்று ஒருவரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

இப்போது நான் கூறுகிற அறை இராஜ குமாரனுடைய படுக்கை யறைகளுக்கு அருகிலுள்ளது. அதற்கும் இராஜ குமாரன் அறைகளுக்கும் இடையில்தான் நீலகண்டன் சயனிக்கவேண்டிய அறை யிருக்கிறது. இரண்டறைகட்கு மத்தியில் ஒரு மெல்லிய தட்டிச் சுவரே யிருக்கிறது. பெரிய நாயகி! இந்தத் தகவல்களை நீ மறவாமல் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இனித் தான் இதில் இரத்தம் சிந்தும் கோர சம்பவமான சரிதையைக் கூறப்போகிறேன்.

சீனன் தன்னறையைப் பார்த்து அது சரியாய் சுத்தி செய்யப்பட் டிருக்கிறதென்று கண்டு அங்கிருந்து தன் குடும்பஸ்தலத்திற்குத் திரும்பப் புறப்பட்டவன் என்ன நினைத்துக்கொண்டோ அடுத்த அறையில் இருக்கவேண்டிய நீலகண்டனைக் கண்டுபேச நினைத்துக்கொண்டு களங்கமின்றி அவன் அறைக்குச் சென்றான். ஒருவிடத்தில் வேலை செய்வோர்கள் சாதாரணமாய் சகோதரர்போல் இருப்பது சுபாவம். ஆகையால் சீனன் களங்கமின்றி கதவைத் திறந்து கொண்டு உள்ளே ஒரு அடி எடுத்து வைத்ததும் அங்கு தோன்றிய காட்சியைக் கண்டதும் ஒன்றும் தோன்றுமல் திப்பிரமை யடைந்து,

"அய்யோ கடவுளே அமிர்தவல்லி இராஜகுமாரி! இங்கே!" என்று பேயைக்கண்டு பயந்தவன்போல் தாழ்வாரத்தின் வழியே ஓட்டமெடுத்தான். அவன் அத்தகைய கல

வாத்தோடு ஓடும்போது சரியாய்க் கவனிக்காமல் தன் எதிரில் வந்துகொண்டிருந்த ஜெயராம் என்பவன்மேல் மோதிக்கொண்டான். இவன் கூறிய வார்த்தைகள் ஜெயராம் செவிகளில் விழுந்தன. ஜெயராம் என்பவனும் இராஜகுமாரன் வேலையாட்களில் மூன்றாமவன் என்று முன்னமே கூறியிருக்கிறேனல்லவா? சீனன் தான் தெரியாமல் மேலே விழுந்ததற்காக மன்னுப்பு கேட்டுக்கொண்டபோது இவன் மனதில் ஏதோ திடீலென்று பெருங்கலக்கம் உண்டாயிருப்பதாக ஜெயராம் அறிந்துகொண்டாலும் தன் நண்பனே அதை மறைக்கப் பார்ப்பதால் தான் கேட்கலாகாதென்று பேசாமலிருந்தான்.

சீனன் தான் தன் நண்பன்மேல் விழுந்ததற்காக மன்னுப்பு கேட்டுக்கொண் டிருக்கும்போதே "நீ நமது நீலகண்டனைக் காணவாபோகிறாய்?" என்றான்.

ஜெயராம் ஆம் என்றதே சீனன் மிக்க படபடப்போடு "அவன் வேலையாயிருக்கிறான். நீ யவனை யிச்சமயம் காண முடியாது. என்னோடுகூட வா" என்று அவன் காத்தைப்பற்றி யழைத்துக்கொண்டு தன் வாசஸ்தலத்திற்குச் சென்று அவனுக்குத் திராக்ஷ சாராயபானம் அளித்து உபசரித்தான். சீனன் மனைவியும் தன் கணவனோடு மனமொத்து, ஜெயராமனுக்கு உபசாரம் செய்தாள். ஜெயராமன் அப்பானத்தையும் சிற்றுண்டிகளையு மருந்தினான். சீனன் தன் சுபாவப்படி வெறும் ஜலமே யருந்தினான். அதற்குள் சீனன் தன் அபூர்வ மனக்கலக்கத்தை மெதுவாய் மறைத்துக் கொண்டான்.

ஜெயராம் சுமார் ஒருமணி நேரம் அங்கிருந்தான். அச்சமயம் வைத்தியர் வந்து சீனன் குழந்தையைப் பார்த்து திருப்திகரமான நிலைமையி லிருக்கிறதென்று கூறிவிட்டுச்

சென்றார். அதன் பிறகு ஜெயராமனும் விடைபெற்றுச் சென்றான். வழியில், சீனன் என்னத்திற்காக அத்தகைய மனக்கலக்க மடைந்தானென்றும், தாழ்வாரத்தில் தன்மேல் மோதிக்கொண்டபோது அவ்வாறு கூறியதற்குக் காரண மென்னவென்றும் சிந்தித்துக்கொண்டே சென்றான். இரவு எட்டுமணி யடித்துச் சற்றுநேரம் ஆகுமட்டும் சீனன் தன் மனைவியோடு கூடவே யிருந்தான். இதற்கிடையில் அவன் வாசித்துக்கொண் டிருந்தான். அவன் மனைவி அவன் மனோ நிலைமையில் ஏதோ வித்தியாச மிருப்பதாய்ச் சற்றும் உணர வில்லை. கடைசியில் சீனன் பத்துமணி வரையில் தன் மனைவி யோடு கூடவே யிருந்து, வியாதியுற்றிருக்கும் குழந்தை சுக மாய் நித்திரை செய்கிறதாவென்று பார்த்துவிட்டுக் கடைசி யில் தன் அறைக்குச் சென்றான். அப்போதுதான் மணி இரவு பத்தடித்தது.

வைரசிங்கம் இராஜகுமாரன் எங்கோ நாடகத்திற்குச் சென்றிருந்து அர்த்த இராத்திரிக்கு அரண்மனைக்கு வந்து தன் அறைக்குச்சென்றார். நீலகண்டன் அங்கு வேலைசெய்து கொண்டிருந்தான். அதன் பிறகு இரண்டுமணிநேரம் அரண் மனையின் அப்பாகத்தில் ஒரு சந்தடியுமில்லை. இரவு சுமார் இரண்டரைமணிக்கு கூடத்திலுள்ள காவல்காரன் "ஓர் கொலை கொலை" என்ற சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டுப் பார்த்த போது வைரசிங்கம் இராஜகுமாரன் மிரட்சி யடைந்த முகத் தோடும் இரத்தக் கறைகள்பட்ட சட்டையோடும் தன் எதி ரில் நிற்பதைக் கண்டான். நீலகண்டன் அவரோடுகூட இருந் தான். உடனே டாக்டரை யழைத்துவர ஒரு ஆள் ஓடினான். இன்னொருவன் பாராக்காரரை யழைக்கச் சென்றான். இராஜ குமாரர் நீலகண்டனோடு தன்னறைக்குத் திரும்பினார். ஜெய ராம் தூக்கத்திலிருந்து கலவரத்தோ டெழுந்தவன் தானும் உடனே அங்கு சென்றான். உடனே சீனன் எங்கேயென்று

விசாரிக்கத் தொடங்கினர்கள். "இராஜகுமாரன் சற்றேறக் குறைய கொலை செய்யப்பட்டார் என்று அவனிடம் கூறு" என்று நீலகண்டன் மொழிந்தான். ஜெயராம் அவ்வாறே துரிதமாய் சீனன் அறையை நோக்கி யோடினன். இடை வழியில் நீலகண்டன் தாயும் கூடத்தில் காவலிருப்பவனும் எதிரில் வரக்கண்டான். உடனே மூவர் சீனன் அறைக்கு ஓடினர்கள். அறைக்குள் நுழைந்ததும் அவர்கள் கண்ட கோரக் காட்சியால் திடுக்கிட்டு அலறினர்கள்.

சீனன் தன் படுக்கையில் சவமாய்க் கிடந்தான். அவன் கழுத்து மிக்க கோரமாய் அறுக்கப்பட்டிருந்தது. கழுத்து முழுதும் ஏறக்குறைய அறுத்துவிடப்பட் டிருந்தது. அவன் தேகத்தில் பூரண உடைகளிருந்தன. அங்கிருந்த முகம் கழுவும் தண்ணீர் பாத்திரத்தில் பாதி இரத்தம் கலந்திருந்தது. அப்பாத்திரத்தின் உதட்டில் இரத்தக் கறைபட்ட விரற்குறிகள் நன்ருய்த் தெரிந்தன. அவன் சட்டை நாற்காலிமேல் வைக்கப்பட்டிருந்தது. அவனுடைய கடியாரம் தலைமாட்டிலிருந்தது. சீனன் யாராலோ கொல்லப்பட்டான் என்று ஜெயராம் மனதில் உடனே பட்டது. அவன் அக் காட்சியை முதலில் கண்டபோதே இது தற்கொலையல்ல. குரூரமாக நடந்த கொலையே என்று ஸ்திரமாய் அறிந்து கொண்டான்..." என்றபோது,

பெரியநாயகி:—"அய்யோ தெய்வமே, பெருங்கோரம்; அவ் வித யோக்கியன் பாபம்..." என்ருள்.

புஷ்பாங்கி:—இன்னெரு விஷயம் கவனிக்கத்தக்கது. ஜெயராம் கூடச்சென்ற காவல்காரனும் நீலகண்டன் தாயும் அறைக்குள் செல்லவேயில்லை. காவலன் வாசற்படியிலேயே பிரமித்து மரம்போல் சற்றுநேரம் அசைவற்று நின்றுவிட்டான். நீலகண்டன் தாயாரோ உடனே

வெளியில் ஓடி சீனன் தற்கொலை புரிந்துகொண்டான் என்று கூக்குரலிட்டாள். காவல்காரன் சற்றுநேரங் கழித்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவனும் அதேவிதமாய்க் கூவிக்கொண்டு சென்றான். கடைசியில் ஜெயராம் ஒருவனே அக்கோரக் காட்சியை மனவருத்தத்தோடு பார்த்துக்கொண்டு நின்றான்.

அவன் இறந்து கிடப்பவன் மஞ்சத்தினருகிற் சென்ற போது கீழே ஒரு துண்டுகடிதம் இருப்பதைக் கண்டு அதை யெடுத்துப் பார்த்தான். அக்கடிதம் சீனனால் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதில் எழுதப்பட்டிருந்த விஷயம் முடிவு பெறாமல் அறைகுறையா யிருந்தது. ஜெயராம் அதிலிருந்த முதல் இரண்டொரு வரிகளை வாசித்ததும் ஒரு பெரிய பிரமாதமான இரகசியத்தை யறிந்துகொண்டான். அவன் எல்லா விஷயங்களையும் அறிந்துகொண்டான். கடந்த மாலை சீனன் தன்னைச் சந்தித்தபோது "அய்யோ கடவுளே. அமிர்தவல்லி இராஜகுமாரி இங்கே!" என்று கூறியதன் அர்த்தம் இப்போது அவனுக்கு நன்றாய் விளங்கிவிட்டது. அதோடு இக்கொலைநடந்த காரணமும் யாவும் அவனுக்கு நன்றாய் விளங்கிவிட்டது. அச்சமயம் ஆட்கள் வரும் சத்தம் கேட்டதால் ஜெயராம் தன்னிடம் அகப்பட்ட கடிதத்தை மடியில் மறைத்து வைத்துக்கொண்டான். மறுநிமிடம் ஒரு சார்ஜெண்டும் சில போலீஸ்காரரும் அறைக்குள் வந்தார்கள்.

ஸார்ஜெண்டின் பெயர் குமரப்பன். அவன் அக்கோரக் காட்சியைக் கண்டு மனங்கலக்கி சற்றுநேரம் அங்கு நின்று பார்த்துவிட்டுத் திரும்பினான். அச்சமயம் தரையில் கிடந்த ஒரு க்ஷவரக் கத்தியைக் கண்டு அதை யெடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு, ஜெயராமனை யழைத்துக்கொண்டு, அந்த அறையின் கதவை மூடிப் பூட்டிக்கொண்டு சென்றான்.

சார்ஜென்ட் ஜோய்த் தன் இடத்திற்குப் போய்விட்டான். ஜெயராம் ஜோய் இளவரசன் அறைக்குச் சென்றான். அச்சமயம் அங்கு இரண்டு பிரபல டாக்டர்கள் வந்து அவர் காயங்களுக்குச் சிகிச்சை செய்துகொண்டிருப்பதைக் கண்டான். அவனிடம் அகப்பட்ட கடிதம் இப்போது என்னிடம் இருக்கிறது'' என்றாள்.

பெரியநாயகி:—''அதே கடிதமா?'' என்றாள்.

புஷ்பாங்கி:—ஆம். அக்கோர சம்பவங்களுக்குப் பின் அவன் என்னிடமே வேலைக்கு அமர்ந்துவிட்டான். எல்லா சங்கதிகளும் எனக்குக் கூறினான். அக்கடிதத்தையும் என்னிடம் கொடுத்தான். அச்சம்பவம் நடந்த மறு நாள் ''இராஜகுமாரனை அவர் வேலைக்காரனாகிய சீனன் கொலைசெய்ய முயன்றதாகவும் பிறகு அவன் தானே தற்கொலை புரிந்துகொண்டதாகவும் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டதே இந்நாட்டார்க்குண்டான வியப்பிற்கு ஓர் எல்லையே யில்லை. பல விதமான பிரஸ்தாபங்க ளுண்டாயின. பெரும்பாலார் தற்கொலை யென்ற கதையை நம்பவேயில்லை. பயங்கரமான உத்தேசங்களெல்லாம் ஜனங்களுக்குள் வழங்கின. மரண விசாரணையில் இராஜகுமாரன் தான் நித்திரை செய்கையில் யாரோ தலைமேல் அடிப்பதுபோல் உணர்ந்து எழுந்தபோது அறையில் ஒரு மனிதன் இருந்து ஓடிவிட்டதாகவும், தான் அவன் யாரென்று பார்க்கவில்லை யென்றும், பிறகு தான் கூச்சலிட்டு நீலகண்டனைக் கூப்பிட அவன் வந்ததாகவும், பிறகு இருவரும்போய் கூடத்திலிருந்த காவலாளிடம் சங்கதி கூறியதாகவும் வாக்குமூலம் கொடுத்தார். கடைசியில் மேல் பார்வைக்கு மரண விசாரணையும் நடந்தது. அதி

யாயமாய் யோக்கியனை அவ்வாலிபன் கொலைசெய்ய முயன்றவனாகவும், தற்கொலை செய்து கொண்டவனாக வும் ருசுப்படுத்தப்பட்டது. கடவுளுக்கே இது பிரீதி" என்றாள்.

பெரியநாயகி:—"சினன் என் சாக்ஷியாய் விசாரிக்கப்பட வில்லை. அக்கடிதம் என் பகிரங்கத்திற்குக் கொண்டு வரப்படவில்லை?" என்றாள்.

புஷ்பாங்கி:—"ஆ! அதைத்தான் இப்போது கூறப்போகி றேன். அக்கடிதம் இதோ விந்த பீரோவில்தா னிருக் கிறது காட்டுகிறேன். அதற்கு முன் சில சங்கதி கூறு கிறேன்..." என்றாள்.

புஷ்பாங்கிச் சீமாட்டி அவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் சமையத்தில் வெளியிலுள்ள தாழ்வாரத்தில் யாரோ திடுக் கிட்டுக் கூவும் சத்தத்தைக் கேட்டு பிரமித்து பேசாமல் ஒத் துக் கேட்டார்கள்.

அங்கு நடந்த சங்கதி யென்னவெனில் அச்சமயம் இராணியே அத்தாழ்வாரத்தின் வழியாய் வந்து தன் பேத் தியை யங்கு கண்டதும் கோபத்தோடு, "இந்நேரத்தில் நீ இங்கு வந்து என்னசெய்கிறாய்? நான் உன்னைக் கண்டுபேச உன் அறைக்கு வந்து வந்து பார்த்து நீ அங்கில்லாமலிருக் கவே தேடிக்கொண்டு வந்தேன். நீ இங்கு வந்து நின்று கொண்டிருக்கிற மாதிரியை நோக்கின் நீ யார் சம்பாஷணை யையோ ஒத்துக் கேட்பதுபோல் காண்கிறது" என்றாள்.

அச்சமயம் வெளியில் வந்து இராணிக்கு நமஸ்காரம் செய்து எட்ட நின்ற பெரியநாயகியும் புஷ்பாங்கியும் பெருந் திகிலடைந்தார்கள். ஏனெனில் தாங்கள் பேசிக்கொண் டிருந்த யாவும் இராஜகுமாரியாகிய சண்பகவல்லி கேட்டுக்

கொண் டிருந்தாளென்று தெரிந்துகொண்டார்கள். அவள் இச்சங்கதிகளை இராணியிடம் கூறிவிட்டால் இராணி தட்சணம் தங்களை அகௌரவத்தோடு அரண்மனையை விட்டுத் தூரத்திவிடுவாள். ஆகையால் அவர்கள் மிக்க வாட்டமும் திகிலுமடைந்த முகத்தோடு சண்பகவல்லியை உற்று நோக்கினார்கள். அக்கன்னிகை யவர்கள் கருத்தை யுணர்ந்து தன் பாட்டியாரை நோக்கி,

“ஆயாள்! நான் இவர்கள் சம்பாஷணையைக் கேட்கக் கருதி ஒத்துக் கேட்கவில்லை. புஷ்பாங்கியம்மாள் தேக சுகமின்றி யிருப்பதாய்க் கேள்விப்பட்டு அந்தம்மாளைக் காண வந்தேன். யாரோ அந்தம்மாளோடு பேசிக் கொண்டிருப்பதாய்த் தெரியவே, அது யார்? நமக்கு அறிமுகமானவர்களா புதியவர்களாவென்று தெரிந்துகொள்வதற்காகச் சற்று தூரலே ஒத்துக் கேட்டேனேயன்றி வேறில்லை” என்றாள்.

இராணி,—“சரி. எது எப்படியாயினும் ஒரு இராஜகுமாரன் மகள் இரவு பதினொரு மணிக்கு இப்படி வாசஸ்தலத்தை விட்டுத் திரிவது சற்றும் தகுதியல்ல. இருக்கட்டும் வா. நான் உன்னோடு பேசவேண்டும்” என்றாள்.

இராஜகுமாரி பெரியநாயகியையும் புஷ்பாங்கியையும் நோக்கி “உங்கள் இரகசியத்தை நான் வெளியிடமாட்டேன்” என்று கூறுபவள்போல் சமிக்கை காட்டிவிட்டு “நான் போய்வருகிறேன்” என்று கூறிவிட்டுத் திரும்பினாள்.

இராணியும் அவளும் திரும்பிச் சென்றுகொண் டிருக்கையில் இராணி சண்பகத்தை நோக்கி “நான் உன்னைக் காணலாம் என்று வந்தேன். நீ முன்பே உன் தோழிகளை யனுப்பி விட்டதாய்க் கேள்விப்பட்டு சயனித்துக்கொண் டிருப்பா

யெனக் கருதி உன் அறைக்குச் சென்று பார்த்தேன். நீ யங்கில்லை. அந்நேர வேளையில் நீ வெளியில் சென்றிருப்பதை யும் இன்று பகல் உன் முகம் மாறுபட்டிருந்ததையும் நோக்க உன்னை யவசியம் காணவேண்டுமென்று என் மனதிற்பட்டு தேடிக்கொண்டு வந்தேன்'' என்றாள்.

சண்பகத்திற்கு இம்மொழிகளைக் கேட்டதும் ஒரு நினைவுவந்து மிக்க கலவரத்தையும் திகிலையும் உண்டாக்கிவிட் டது. அதாவது அவள் தன் தாய்க்கு நாம் முன்கூறியபடி கடிதம் எழுதியவள் அதை மேஜைமேலேயே வைத்துவிட்டு வந்துவிட்டாள். அந்த நினைப்பு இப்போதுண்டானதும் "ஓகோ! இராணி அக்கடிதத்தைப் பார்த்து முழுதும் வாசித் திருப்பாள். இவள் இவ்வளவு கடுகடுப்போடு பேசுவதற் குக் காரணம் அதுவே'' யென்று அவள் மனதிற்பட்டது.

சண்பகம் உடனே கோபமும் வெறுப்பும் அடைந்து தன் பாட்டியாரை நோக்கி, "ஆ நான் மேஜைமேலேயே மறந்து வைத்துவிட்டு வந்த கடிதத்தை யெடுத்து வாசித்துப் பார்த்தாய் என்று கருதுகிறேன்'' என்றாள். அவர்கள் ஆசா ரப்படி யவ்வாறு ஒருவர் வைத்துவிட்டிருக்கும் கடிதத்தை அவர்கள் யாராயிருந்தாலும் இன்னொருவர் அதை வாசிப்பது ஒழுங்கீனம்.

இராணி:—"நான் உன் அறையில் உன்னைக் காணாதபோது மேஜைமேல் சில புத்தகங்கள் முதலியவை யிருப்பதைக் கண்டு நீ எத்தகைய நூல்களை வாசிக்கிறாயென்று பார்க்க விரும்பி மேஜையருகிற் சென்று பார்த்தபோது எழுதி வைத்திருந்த அக்கடிதத்தைப் பார்த்தேன். இடையில் உன்னிடம் தோன்றிய மாறுதல்களால் நீ யாருக்கு என்ன விஷயத்தைப்பற்றி கடிதம் எழுதுகிறு

யென்று காண விரும்பினேன். ஒருதரம் என் நேர் நெறிதவறி நடந்தேன். ஆம், ஆனால் நீ செய்த தவறை நோக்க இது பெரிதல்ல. ஆம் வாசித்தேன். அதி லிருந்த ஒவ்வொரு வார்த்தையையும் வாசித்துப் பார்த் தேன்.

நீ எவ்வளவு துணிகரத்தோடு உன் தந்தைமேலும், என் மேலும், உன் சிறிய தந்தைகள் மேலும், பிரமுகர்களான இந்நாட்டுச் சீமான்கள் மேலும் குற்றஞ் சாட்டத் தீரங் கொண்டிருக்கிறுயென் றறிந்துகொண்டேன்'' என்ருள்.

சண்பகம்:—''ஆம் அது உண்மையே நான் தைரியத்தோ டேயே அப்படிக் குற்றஞ் சாட்டுகிறேன். அது உண் மையே. சற்றும் பொய்யல்ல. இன்னும் கூறுகிறேன். நான் ஒத்துக் கேட்டது இன்று நீ கண்டது ஒன்று மட்டுமல்ல. இதே சதியாலோசனையைப் பற்றி நீயும் அந்த மாகதம்மாளும் பேசிக்கொண்டது முழுமையும் நான் என் செவிகளாற் கேட்டேன். நேற்று அதைக் கேட்டதாலேயே என்னிடம் அத்தகைய மாறுதல் உண்டாயிற்று'' என்ருள்.

இம்மொழிகளைக் கேட்டதே இராணி இனி நாம் எதை யும் மறைப்பதில் பயனில்லையென்று தெரிந்துகொண்டாள். அதன்மேல் துணிகரத்தோடு இராஜகுமாரியை நோக்கி,

''சண்பகம்! இனி நாம் ஒருவரை யொருவர் உடனே அறிந்து கொள்ளவேண்டியதே. நீ உன் தாயாருக்கு எழு திய அக்கடிதத்தில் நாங்கள் அவளை யடியோடழித்துவிடச் சதியாலோசனை செய்வதை நீ யிப்போதுதானறிந்ததாகவும் உன் அத்தையாகிய சுந்தராங்கியின் உதவியால் நீ முன்பின் காணுத ஒரு வாலிபன் உதவியை நம்பி யிருப்பதாகவும், அவ

ளுல் அவளுக்குக் கெடுதி நேரிடாது தடுத்துவிடலாகுமென் றும் எழுதி யிருக்கிருய். உண்மையில் நீ அவன் பெயரை மட்டும் கேட்டிருக்கிருயே யன்றி அவன் யாரென்றறியாய். உன் கடிதத்தை அவன் வசம் கொடுத்தனுப்ப உத்தேசித் திருக்கிருய். ஜெகதீசன் என்ற அவன் உங்கள் கோரிக் கைக்கு இணங்கிஞல் அவ்வாறு செய்யக் கருதியிருக்கிறீர் கள். இருக்கட்டும்; அக்கடிதத்தை வாசித்தபின் உன்னை யிவ்வளவு அக்கரையாய்த் தேடிக்கொண்டு வந்தது ஏனென் ருல் உன்னிடம் ஒரு சங்கதி கூறுவதற்காக அதாவது, இப் போது இந்த இராஜ்ஜியத்தில் ஒருவர் சுயேச்சையே செங் கோலாய் எங்கும் செல்லும். அது யாருடைய இச்சை யென்ருல் என் ஒருத்தியுடைய இச்சையே. நீ யின்னும் இராணியின் பதவிக்கு வரவில்லை. இப்போது என் பிரியத் திற்கு நீ இணங்கி நடக்காவிட்டால் ஒருபோதும் நீ அப் பதவியை யடையமாட்டாய். நீ யுன் தந்தையின் பிரியத்திற்கு மாருக நடந்தால் உன் தந்தையே தனக்குப் பின் பட்டத்திற் குத் தன் தம்பிகளில் ஒருவனை நியமித்துவிட்டு உன்னை நிரா கரித்துவிடுவான். ஆ! அந்தச் சுந்தராங்கி! என்ன தைரிய மாய் அந்த வேசி யிவ்விஷயங்களில் தலையிட்டாள். அறிவு கெட்ட நாய்-தான் மிக்க யோக்கியவதியைப்போல்'' என்று முகத்தில் கோபத்தணல் வீசப் பற்களை நறநறவென்று கடித் துக்கொண்டே கூறினுள்.

சண்பகம் மிக்க வெறுப்போடும் கோபத்தோடும் தன் பாட்டியாரை நோக்கி "ஆ! நீ பெற்ற பெண்மீதிலேயா அவ தூருன மொழிகளைக் கூறத் துணிகிருய்?'' என்ருள்.

இராணிக்கு அப்போதுதான் தான் ஆத்திரப்பட்டு கூறிவிட்டது முட்டாள்தனம் என்று மனதிற்பட்டது. அவள் இராஜகன்னிகையை நோக்கி "இல்லை இல்லை. நான் கூற...

நான் கூறக் கருதியது என்னவெனில், உலகில் குற்றமற்றவர்கள் ஒருவருமில்லை. இவளும் ஒரு குற்றமும் செய்யாதவளாயிருக்கமாட்டாள் என்பதே. அது கிடக்கட்டும். நீ எழுதிய கடிதத்தையோ-இதோ இதே அதன் முடிவு" என்று கூறிக்கொண்டே அதை மடியிலிருந்தெடுத்து அங்கு எரிந்துகொண்டிருந்த நெகிடித் தீயி லெறிந்துவிட்டாள்.

சண்பகம்:—அப்படியானால் என் தாயாருக்குக் கடிதம் எழுத எனக்குச் சுயாதீன மில்லையோ?

இராணி:—நீ எவ்வளவு வேண்டுமாயினும் எழுதலாம். ஆனால் என் நோக்கத்திற்கு மாறான வார்த்தை யொன்றேனும் எழுதலாகாது. என் வார்த்தையைக் கடந்து அப்படிச் செய்தால் அக்கடிதங்கள் அடியோடு அடக்கிவிடப் படும்.

சண்பகம் கண்கள் சிவந்து முகத்தில் கோபத்தனல் வீச "ஆ! இந்த நாட்டின் இராஜகுமாரி ஒரு அடிமையே" என்றாள். இராணி "ஆம் யாருடைய பிரியம் செங்கோலா யிருக்கிறதோ அதற்கு அடிமையாய்த்தா னிருக்கவேண்டும்" என்று பெருமையோடு கூறினாள்.

இம்மொழிகளைக் கேட்ட இராஜகுமாரி மிக்க கோப மடைந்து, "அம்மாதிரி ஒருவருக் கடிமையாயிருக்கும் இராஜகுமாரியா யிருப்பதைக் காட்டிலும் சுயாதீனத்தோடு வீதிகளில் பிச்சை யெடுத்துண்டு காலட்சேபம் செய்வேன்" என்றாள்.

இராணி:—"நீ இம்மாதிரி பேசுவதில் ஒரு பயனுமில்லை. நீ பட்டத்திற்குச் சுதந்திரமுடைய இராஜகுமாரியா யிருந்தாலும் உன்னை யெவ்வாறு தண்டிப்பதென்பதை நானறிவேன். இனி நீ நான் கூடவந்தாலன்றி நகரத்

திற்குள் பிரவேசிக்கலாகாது. உலவச் சென்றாலும், வண்டியில் சவாரிபோனாலும் சாரதி நான் கூறிய எல்லைக்கு அப்பால் உன்னை யழைத்துக்கொண்டு செல்ல மாட்டான். அந்த ஜெகதீசன் உதவியை நீ நம்பியிருக்கிறாய். அது ஒருபோதும் நிறைவேறாதென்று எண்ணிக்கொள். இனி நான் போய்வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அதன் பிறகு இராஜகுமாரி தன் அறைக்குச் சென்று சயனித்துக் கொண்டாள். ஆனால் அவள் மனோநிலைமையில் நித்திரை யெப்படி செய்யக்கூடும். அவள் சுவாதீனப் பிரியமும், பெருந்தன்மையும், யாவரும் சுயாதீனத்தோடு சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்ற எண்ணமும் உடையவள். ஆகையால் "சேசே! இராஜகுமாரி யென்கிற பெயர் வெறும் சூனியமே. கடைசியில் நாம் அடிமையே. இருப்பது சிறையே. வரையறுக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்ல நமக்குச் சுதந்திரமில்லை. அய்யோ! கடவுளே என் தாயாருக்குக் கடிதம் எழுதவே எனக்குச் சுதந்திரமில்லை..." என்று இவ்வாறு சிந்தித்ததும் அவள் சுயகுணம் மேல்கிளம்பியது. உடனே அவளுக்கு ஒருவிதத் துணிகரமும் தைரியமும், கோபமும், உற்சாகமும் உண்டாய்விட்டது.

உடனே இராஜகுமாரி தட்டென்று படுக்கையை விட்டெழுந்து, "என்னை யார் தடை செய்கிறவர்கள் பார்ப்போம்'' என்று கூறிக்கொண்டேபோய் அறையின் கதவைத் திறக்க முயன்றாள். கதவு உடனே திறந்துகொண்டது. அவள் எதிர் பார்த்தபடி கதவு பூட்டி யிருக்கப்படவில்லை. ஒரு சமயம் இராணி தாழ்வாரத்தின் கோடியில் மறைந்திருந்து நமது நடக்கைகளை வேவு பார்க்கிறாள்போலும், அல்லது வேறு யாரையாவது அதற்காக வைத்திருப்பாள்

என்று கருதினாள். ஆனால் மறுகிமிடம் துணிகரத்தோடு கதவைத் திறந்துகொண்டு தாழ்வாரத்தின் வழியாய்ச் சென்று, புஷ்பாங்கியின் அறைக்குச் சென்று மெதுவாய்க் கதவைத் தட்டினாள்.

உடனே பெரியநாயகி வந்து துரிதமாய்க் கதவைத் திறந்தாள். அச்சீமாட்டி சுமார் 26-வயதுடைய மிக்க அழகிய கைம்பெண். அவள் அசௌக்கியமா யிருக்கும் தன் சிநேகியிடம் அந்நேரம் வரை பேசிக்கொண்டே யிருந்தாள். அந்த வேளையில் இராஜகுமாரி அங்குவந்ததைக் கண்டு அச்சீமாட்டி மிக்க வியப்படைந்தாள்.

இராஜகுமாரி அச்சீமாட்டியைக் கண்டவுடனே, "நான் உன்னிடத்தில் தனியாய்ப் பேசவேண்டும். புஷ்பாங்கி யம்மாள் விழித்துக்கொண் டிருக்கிறார்களா?" என்றாள்.

பெரியநாயகி, ஆம்; இன்னும் விழித்துக்கொண்டே யிருக்கிறார்கள்" என்றாள். இருவரும் உள்ளே நுழைந்ததும் இராஜகுமாரி புஷ்பாங்கி: தனக்கு நல்வரவு கூறுவதற்குக்கூட எதிர் பார்க்காது, அவர்கள் இருவர்களையும் நோக்கி,

"சீமாட்டிகளே மற்ற விஷயம் எதிருந்தாலும் ஒரு பக்கம் இருக்கவிட்டு நான் வந்த விஷயத்தைக் கூறுகிறேன். அதாவது நான் உங்களுக்கு ஒரு உதவி செய்திருக்கிறேன். அதற்குப் பதிலாக ஒரு உதவிசெய்யும்படி யுங்களைக் கோரிக் கொள்கிறேன். நான் செய்த உதவியாவது சீனனைப்பற்றியும் வைரசிங்கம் கோமகனைப்பற்றியும் நீங்கள் பேசிக்கொண்ட விபரீதமான இரகசிய சங்கதி முழுமையும் நான் காதாற் கேட்டபோதிலும் அதில் எள்ளளவுகூட இராணியிடம் நான் கூறவில்லை" என்றாள்.

பெரியநாயகி:—ஆ! தாங்கள் அதைக் கேட்டீர்களா?'' என்ருள்.

இராஜகுமாரி:—“ஆம்; ஒரு வார்த்தைகூட விடாமல் கடைசியில் நான் திடுக்கிட்டுச் சத்தமிட்டதினுலே உங்கள் சம்பாஷணை தடைப்பட்ட வரையில் கேட்டேன். ஆகையால் அக்கோமகனை என் சிற்றப்பஞகிய சுற்றத்தானென்று மனதில் நினைக்கவே யெனக்குப் பிரியமில்லை. ஆ! அத்தகைய அக்கிரமப் பாதகம்!'' என்ருள்.

புஷ்பாங்கி:—“தாங்கள் அவசரப்பட்டு அப்படித் தீர்மானம் செய்துவிடலாகாது. அச்சங்கதியின் கடைசி பாகத்தையும் கேட்டபின் சிந்திக்கவேண்டும்'' என்ருள்.

சண்பகம்:—“ஆ அச்சங்கதியின் மீதி பாகத்தையா? ஆம் அவசியம் கேட்கவேண்டும். ஆனுல் இப்போது இங்கே நான் நிற்கலாகாது. இராணி எங்காவது மறைந்து நின்று பார்த்துக்கொண் டிருந்தாலு மிருப்பாள். அல்லது யாரையாவது வேவு வைத்திருப்பாள். ஒரு சமயம் மறுபடி என் அறைக்குச் சென்று பார்த்தாலும் பார்ப்பாள்'' என்ருள்.

இதைக் கேட்ட புஷ்பாங்கிச் சீமாட்டி மிக்க பீதியடைந்து “அய்யோ கடவுளே! தாங்கள் இங்கு வருவதை இராணி பார்த்துவிட்டிருந்தால் என்னை யுடனே வேலையினின்று நீக்கிவிடுவாளே!'' என்ருள்.

சண்பகம்:—“இல்லை யில்லை. நான் இங்கு வருவதை யொருவரும் பார்க்கவில்லை. நான் ஒரு நாளைக்கு இந்நாட்டிற்கு இராணியாகத் தக்கவள் என்பதையும் அப்போது எனக்கு உதவி புரிந்திருப்பவர்களுக்கு நான் திருப்தி

யாய்ப் பரிசளிக்கக் கூடியவளென்பதையும் நீங்கள் உணர வேண்டும்.

"தங்கள் கட்டளைப்படி நடந்துகொள்ள ஆயத்தமா யிருக்கிறோம்" என்று புஷ்பாங்கி பெரியநாயகி இருவரும் ஏககாலத்தில் கூறினார்கள்.

சண்பகம் "ஆ! இதற்காக உங்களுக்கு ஆயிரம் வந்த னங்களளிக்கிறேன். எனக்காகக் கஷ்டமான வேலையொன்றும் செய்யும்படி நான் கூறவில்லை. நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை யென் அத்தையாகிய சுந்தராங்கி இராஜ குமாரியிடம் சேர்ப்பித்து விடவேண்டும். சீக்கிரமாய் ஆல சியமின்றி அப்படிச் செய்யக்கூடுமா?" என்றாள்.

பெரியநாயகிச் சீமாட்டி "நான் நாளை மாலை நகரத்திற் குச் செல்வதற்காக விடுமுறை பெற்றுக்கொண் டிருக்கிறேன். அப்போது தங்கள் கடிதத்தைக் கட்டாயம் சுந்தராங்கி இராஜ குமாரி யவர்களிடம் அவசியம் சேர்ப்பித்து விடுகிறேன்" என்றாள்.

சண்பகம் உடனே அவர்களிடமே காகிதம் மசி முத லிய எழுது கருவிகளை வாங்கி ஒரு கடிதமெழுதி முத்திரை யிட்டு அதைப் பெரியநாயகிச் சீமாட்டியிடம் அளித்தாள். புஷ்பாங்கிச் சீமாட்டி இராஜகுமாரியை நோக்கி "தாங்கள் தயைபுரிந்து உடனே தங்கள் அறைக்குச் செல்லப் பிரார்த் திக்கிறேன்" என்றாள்.

சண்பகம்:—"ஆம். ஆனால் ஒரு நிபந்தனை. அதாவது முதல் சமயம் நேரிடும் சந்தர்ப்பத்தில் அந்தச் சரித்திரத்தின் மீதி பாகத்தை நான் கேட்கும்படிச் செய்யவேண்டும்" என்றாள்.

புஷ்பாங்கி:—"ஆம். ஆம். தங்களுக்குச் சரியான சமயம் வாய்க்கும்போது அப்படியே அவசியம் கூறுகிறேன்.

ஆனல் இப்போது ஒரு வார்த்தைகூட அதைப்பற்றிப் பேச எனக்குப் பயமாயிருக்கிறது. இராணி யவ்வளவு பயத்தை யுண்டாக்கிவிட்டாள். என்னைத் தயைபுரிந்து மன்னித் தருளவேண்டும்'' என்ருள்.

சண்பகம்:—“என் விஷயமாக இனி நீங்கள் சற்றும் பயப் பட வேண்டாம். என் அன்பார்ந்த சினேகிகளே. இனி நான் விடைபெற்றுச் செல்கின்றேன்'' என்று கூறிவிட்டுத் தன் அறைக்குத் திரும்பினுள்.

93 - வது அத்தியாயம்

அதே தினம் பகல் ஒருமணி யிருக்கும். அப்போது சுந்தராங்கி இராஜகுமாரி உடுத்திக்கொண்டு தன் அறையில் உட்கார்ந்து ஆவலோடு யாருடைய வரவையோ எதிர் நோக்குபவள்போல் வாயிற்படியின் புறமாய் அடிக்கடி பார்த் துக்கொண்டே யிருந்தாள். தான் ஏதோ எழுதவேண்டிய வேலை யிருக்கிறதென்று கூறித் தன் தோழிகளையெல்லாம் வெளியி லனுப்பிவிட்டாள். அவர்கள் சென்றதே அம்மாது தன் சிரசை யிருகரங்களின் மேலும் சாய்த்துக்கொண்டே “அய்யோ தெய்வமே! இரவுகண்ட காட்சியை நினைத்தாலும் தேகம் இன்னும் நடுங்குகிறதே. அய்யோ நான் என் புதல் வன் முகத்தைக் காண ஆவல்கொண்டு சென்றதும், அங்கு கண்ட அகோர காட்சியும், அய்யோ என் மனம் துடிதுடிக் கிறதே. சகோதரன் உண்மையை யறிந்துகொண்டு வருவ தாய் வாக்களித்தவன் இன்னும் வரக்காணுமே...'' என்று மிக்க வேதனை யனுபவிக்கலானுள்.

அச்சமயம் ஒரு வேலைக்காரி வந்து இளவரசர் வருகிறார் என்று அம்மாளிடம் கூறினாள். இரண்டொரு நிமிடங்களுக்குள் இளவரசனே அறைக்குள் வந்தான். சுந்தராங்கி அவன் முகத்தைப் பார்த்ததும் அவன் ஏதோ மனத்தாங்கலோடும் கோபத்தோடுமிருப்பதா யறிந்து,

"ஏன்? ஏதேனும் வியாகூலமான சமாசாரம் கொண்டு வந்தாயோ? என்னை யின்னும் சகிக்கமுடியாத மனோவேதனையில் வைக்காதே. உண்மையைக் கூறிவிடு" என்றாள்.

இள.—"அப்படி யொன்றுமில்லை. உன் புத்திரனுக்குப் பட்டிருக்கும் காயம் ஆபத்தை யுண்டாக்கத் தக்கதல்ல. அவனுக்காகச் சற்றும் பயப்படவேண்டியதே யில்லை. அவன் ஒரு வாரத்தில் சுகமடைவான். ஆனால் நான் உனக்காகக் கஷ்டப்பட்டு இத்தகைய உதவி செய்து கொண்டிருக்கும் அதே காலத்தில் நீ என்னைப்பற்றி கலகம் உண்டாக்கிக்கொண்டு எனக்கே விரோதம் செய்துகொண் டிருக்கிறாய். என் புத்திரிக்கே நீ..." என்றதே,

சுந்த:—"ஆ! என்ன என்ன? நீ கூறுவதன் அர்த்தமென்ன?" என்றாள்.

இள:—"எனக்கு எல்லா சங்கதியும் தெரியும். ஒரே கேள்வி கேட்கிறேன். ஜெகதீசன் என்ற வாலிபனுக்கு நீ கடிதம் எழுதி யனுப்பிவிட்டாயா?" என்றான்.

சுந்த:—"ஓகோ! அப்படியானால் சண்பகவல்லி எனக்குத் துரோகம் செய்து காட்டிக் கொடுத்துவிட்டாள்" என்றாள்.

இள:—"சேசே! என் வயிற்றில் பிறந்தபெண் அப்படி இழிவான தொழில் செய்யுமென்று ஒருபோதும் நினைக்

காதே. நடந்த சங்கதியைக் கூறுகிறேன். சண்பகம் இரவு தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதினள். அதை நமது தாயார் பார்த்துவிட்டபடியால் எல்லா சங்கதியும் தெரிந்தது'' என்ருள்.

சுந்த:—அய்யோ! அவள் கூறிய விஷயங்களைக் கேட்டு என் மனமிரங்கி விட்டதால் நான் அப்படிச் செய்வதாய்க் கூற நேர்ந்தது. அவளுடைய மனே பாவத்தினுண்மை யுனக்குத் தெரியுமா?

இள:—"ஆகா! நான் யாவுமறிவேன். முன்னளிரவு நமது தாயாரும் மாகதம்மாளும் சம்பாஷித்துக் கொண்டிருந்ததை சண்பகம் ஒத்துக்கேட்டாள். ஆனல் அவர்கள் வார்த்தைகளை யெல்லாம் இவள் சரியாய்க் கேட்காமல் கலவரமான மனே நிலைமையில் தப்பாய் அர்த்தம் செய்துகொண்டு தன் தாயாருக்குக் கெடுதிசெய்ய ஏதோ சதியாலோசனை நடப்பதாக தனக்குள் எண்ணிக் கொண்டாள். இந்த விபரீதமே இக்குழப்பத்திற்குக் காரணம்'' என்ருன்.

சுந்த:—ஆ! நீ கூறுவதுமட்டும் உண்மையானல் நான் மிக்க சந்தோஷ மடைவேன். அத்தகைய சதியாலோசனை மட்டும் நிகழ்வதல்லவென்று கூறினல் நான் எவ்வளவோ சந்தோஷ மடைவேன்.

இள:—"அப்படிப்பட்ட சதியாலோசனை யொன்றும் உண்மையில் இல்லவேயில்லை. அது சண்பகவல்லியின் கலவரமான மனதில் ஒரு பொய்த்தோற்றமா யிருக்கிறதே யன்றி, அத்தகைய அக்கிரமம் என் மனைவிக்கு நடக்குமென்று நீ கருதுகிருயா? ஒருகாலு மில்லை'' யென்று மனதார அசத்தியம் கூறினன்.

சுந்த:—ஆ! அப்படியானல் நான் மிக்க சந்தோஷப்படுவேன். உண்மையில் நான் அந்த ஜகதீசன் என்பவனுக்குக் கடிதம் எழுதி யிருக்கிறேன்.

இள:—"அப்படியானல் நீ யுடனே அவனுக்கு இன்னெரு கடிதம் எழுதி, அதில் நீ முன் கடிதத்தில் எழுதிய சங்கதிகளெல்லாம் தவருய் அர்த்தம் செய்துக்கொண்டதால் எழுதப்பட்டதென்றும், அப்படிப்பட்ட சங்கதி உண்மையில் ஒன்றும் நடைபெற வில்லையென்றும் ஆகையால் அவன் வரவேண்டிய அவசிய மில்லையென்றும் உடனே யெழுதிவிடு. அப்படி யவன் வலிய வந்தால் அவன் உன்னைக்காண அனுமதி யளிக்காதே. அவன் ஒரு பொய்யனுகிய நாடோடி. யோக்கிய னல்ல..." என்றதே,

சுந்தராங்கி, "ஆ! அவன் அப்படிப்பட்டவனு!" என்ருள்.

இள:—"ஆம் அவன் உண்மையில் மாறுபெயர் வைத்துக் கொண்டு ஊரெங்கும் திரிந்துகொண்டு ஏமாறுகிற கன்னிகைகளைத் தன் வலையிற் சிக்கும்படிசெய்து மோசம் செய்கிறவன். அதற்காகவே அவன் பருதிபுரத்தில் சிறையாக்கப்பட்டான். இதைப்பற்றிய சங்கதி இத்தோடு போதும். நீ இனி அந்த விஷயத்தில் தலையிடாமல் அடியோடு விலகிவிட்டால் எல்லா விஷயங்களும் சரிப்பட்டுப் போம்" என்ருன்.

சுந்த:—"ஆகா நான் தடையின்றி அப்படியே செய்கிறேன். இன்றே நீ கூறியபடி நான் ஜகதீசன் என்பவனுக்குக் கடிதம் எழுதி விடுகிறேன். இடையில் அவன் இங்கு வந்து என்னைக் காணவேண்டுமென்று விரும்பினல்

அவனை யுள்ளேவிட வேண்டாமென்று வேலைக்காரருக் கட்டளையிட்டு விடுகிறேன்'' என்றாள்.

இள:—நீ இப்போது கூறுவது புத்திசாலித்தனமான வார்த்தை. என் புத்திரிக்குத் தகுந்த புத்திமதி கூறு. வீணாய் அவள் மனதில் கொண்டிருக்கும் எண்ணங்களனைத்தும் கலவரத்தாலுண்டானதே யன்றி உண்மையல்லவென்று விளங்கும்படி கூறு. தாயார் எனக்கு ஒரு பெரிய கடிதம் எழுதி யனுப்பினார்கள். இரவு அவர்களுக்கும் சண்பகத்துக்கும் ஏதோ வாக்குவாதம் நடந்ததாய்த் தெரிகிறது. எப்படியாவ தாகட்டும் நான் சண்பகத்திற்குத் தகுதியான ஒருவனைப் பார்க்கிறேன்'' என்றான்.

சுந்த:—அய்யோ அவள் இன்னும் மிக்க பாலியமாயிற்றே.

இள :—பாலியமா—என்? மணம் செய்துகொள்ளத் தக்க காலம் வந்துவிட்டதே.

சுந்தராங்கி ''என் மகன் இன்னும் நீ கூறிய வைத்தியர் வீட்டில்தானே யிருக்கிறான்?'' என்றாள். இளவரசன் ''ஆம் சந்தேகமின்றி அங்குதா னிருக்கிறான். அந்தக் காயம் ஆறும் வரையில் அவன் வெளி செல்லலாகாது. சுகமடைந்த பிறகு அவன் எங்கே செல்வது. மறுபடி அத்துஷ்டச் சகவாசத்தோடு சேர்க்கப்படலாகாதல்லவா?'' என்றான். சுந்தராங்கி ''அய்யோ கடவுளே! ஒருகாலும் அப்படி விட்டுவிடலாகாது. நான் கூச்சலிட்டு மூர்ச்சை யடைந்தபோது அவன் என்னைப் பார்த்து நான் யாரென்று தெரிந்துகொண் டிருக்க மாட்டானே?'' எனலும், இளவரசன், ''இல்லையில்லை. தெரிந்து கொண் டிருக்கமாட்டான். அச்சமயம் உன் முகமூடி விலகிவிட்டதால் ஒரு சமயம் உன் முகத்தைப் பார்த்திருக்க

லாகும். ஆனால் நீ யாரென்றறிந்துகொண் டிருக்கமாட் டான்'' என்றான். அதன்மேல் சுந்தராங்கி "அப்போது நடந்த சம்பவங்களைக் கூறு பார்ப்போம்'' என்றாள்.

இள:—"ஆகா, சுருக்கமாய்க் கூறுகிறேன் கேள். தானப் பன் என்னைப் பாலத்தின் கோடியில் சந்தித்து இரண்டு மூன்று நிமிடங்கள்கூட ஆகவில்லை. அப்போதுதான் பணத்தை யவன் கையிலளித்தேன். அச்சமயம் யாரோ ஒரு ஸ்திரீ அதிதுரிதமாய்ப் பாலத்தின் வழியே சென் றாள். அவள் ஒரு தடித்த முக்காடணிந்து ஏழையைப் போல் உடை யணிந்திருந்தாள். ஆனால் அவள் ஆத் திரத்தோடு துரிதமாய்ச் சென்றதால் நானும் தானப்ப னும் திடுக்கிட்டு அவளை நோக்க நேர்ந்தது. அச்சமயம் காற்று வீசியதால் அவள் முக்காடு விலக அருகிலிருந்த தீபவொளியால் அவள் முகத்தை நாங்களிருவரும் பார்த்தோம். அவள் யாரென்று தெரிந்துகொண்டோம். அவள் யாராகவாவ திருக்கட்டும். அவள் முகத்தில் பயங்கரமான விகாரம் தோன்றியிருந்தது. நாங்களிரு வரும் அவள் யாரென்று ஐயமறத் தெரிந்துகொண் டோம். ஆனால் அவள் எங்களைப் பார்க்கவில்லை. தானப் பன் அவளைப் பின்தொடர முயன்றான். ஏனெனில் அவன் அவளிடம் பேசவேண்டிய விஷயமிருந்தது. அவ்விஷயமே அவள் அந்த இரவில் அங்குவர நேர்ந்த தன் காரணம். அவன் பாய்ந்துபோய் அவள் தோளைப் பற்ற அடியெடுத்து வைத்த சமயம் பூமியே பிளந்து விடுவது போன்ற ஒரு பயங்கரமான சத்தம் கிளம்பி யதைக் கேட்டு இருவரும் பிரமித்து நின்றோம். உடனே என்னமோ ஆபத்தென்று என் மனம் திடுக்கிட்டது. அதோடு அச்சத்தம் உன் குரல்போல் எனக்குத்

தோன்றியது. உடனே எனக்கு மற்றெல்லா விஷயங்களும் அடியோடு மறந்துபோயின. தானப்பன் என்னுடுகூட வந்தால் உன்னைப் பார்த்துவிடுவானேயென்ற முட்டாள் தனத்தைக்கூட நான் அச்சமயம் கவனிக்கவில்லை. உடனே பித்தம் பிடித்தவன் போல் அங்கிருந்து ஒரே யோட்டமாய் நீ யிருக்க வேண்டிய இடத்தை நோக்கிவந்தேன். தானப்பனும் சத்தத்தால் உண்டான கலவரத்தினுல் நாங்கள் கண்ட மாது யாரென்று அறிந்தும் அதை யடியோடு மறந்து என் பின்னுலேயே ஓடிவந்தான்.

நாங்கள் இருவரும் நீ சென்ற பாலத்தின் கண்ணில் பிரவேசித்தது நீ யங்கு மூர்ச்சித்து விழுந்து கிடப்பதையும், அவ்வாலிபன் ஈட்டியால் குத்தப்பட்டு விழுந்து கிடப்பதையும் கண்டோம். தட்சணம் எனக்கு நடந்த சங்கதி இன்ன விதமென்று மனதிற்பட்டுவிட்டது. அதே சமயம் ஏக காலத்தில் தானப்பன் மனதிலும் அந்த உண்மை பளிச்சென்று புலப்பட்டுவிட்டது. நாங்களிருவரும் உண்மையின்னதென்று விபரமா யறிந்துகொண்டோம். நாங்கள் கண்டோமே அந்த ஸ்திரீயே அந்த வேலையைச் செய்தவள்'' என்றுன்.

இம்மொழிகளைக் கேட்டதே அம்மாது தன் மனதின் மேலிருந்த ஒரு பாறுங்கல் எடுக்கப்பட்டவள்போல் ''ஆ கடவுளே! நீங்கள் அம்மாதைக் கண்டது பெரும் புண்ணியமாய்விட்டது. இன்றேல் இச்சங்கதி என்மேல் சந்தேகத்தை யுண்டாக்கினுலும் உண்டாக்கும். அதை நினைக்கும் போதே யென் உளம் நடுங்குகிறது. ஆ! அக் கொலைபாதகி யார்?'' என்றுள்.

இள:—அதைப்பற்றி நீ ஒரு சிந்தனையும் வைத்துக்கொள்ள வேண்டாம். தானப்பன்மேல் அம்மாதிற்குக் கொடிய விரோதமிருக்கக் காரண மிருக்கிறது. அவன் அந்த வேளையில் அப்பாலத்தின் கண்ணிற்கு வருவான் என்று அவள் நன்ருயறிவாள். மற்ற சங்கதிகளொன்றும் அவளுக்குத் தெரியாது. ஆகையால் அச்சமயம் அவன் மேல் பூரணவஞ்சம் தீர்த்துக்கொள்ளத் துணிந்து அங்கு வந்தாள். தெய்வகதியாய் அச்சமயம் நமது வாலிபன் அங்கிருந்தது அவளுக்குத் தெரியாது. அவனே தானப்பன் என்றெண்ணி யீட்டியால் குத்தி விட்டாள். அவளைப்பற்றிய சங்கதி யிதோடிருக்கட்டும். அங்கிருந்த கோரக் காட்சியைக் கண்டதே என் மன நாட்டம் முழுமையும் உன்மேல் விழுந்துவிட்டது. நீ மூர்ச்சை யடைந்திருந்தாய். உன் முகமூடி கீழே விழுந்து கிடந்தது. நீ பெருமூச்சு விட்டுக் கண்களைத் திறந்து மறுபடி மூடிக்கொண்டாய். நான் உன்னை யெடுத்து அங்கிருந்த கற்பலகைமேற் படுக்க வைத்து விட்டு அவ்வாலிபனைக் கவனிக்கத் தொடங்கினேன். அவன் மார்பிலிருந்த ஈட்டியைப் பிடுங்கினேன். அவன் உடனே பெருமூச்சு விட்டான். உடனே அவன் பிராணனோ டிருக்கிருனென் றுணர்ந்துகொண்டு அவன் காயத்திலிருந்து ஓடிவந்த இரத்தத்தை யென் கைக் குட்டையால் தடைப்படுத்தி கட்டினேன். தெய்வ கதியாய் அச்சமயம் பாலத்தின்மேல் ஒரு வண்டி காலி யாய்ச்சென்றது. உடனே அவ்வாலிபனை மெதுவாய்த் தூக்கிச் சென்று அவ்வண்டியிலேற்றி டாக்டரிடம் அனுப்பினேன். அந்த டாக்டர் எனக்கு நன்ருய்த் தெரிந்தவர். ஆகையால் நான் கூறியதாய்க் கூறும்படி தக்கவிதமாய்த் தானப்பனிடம் கூறி அவ்வாலிபனை

அந்த டாக்டரிடம் கொண்டுபோய் விடும்படி யனுப்பினேன். அப்புறமே என் மனம் நிம்மதி யடைந்தது.

அதன் பிறகு உன்னைக் கவனித்தேன். நற்காலமாய் நீ பூரண ஸ்மரணை யடைந்து என்னோடு நடந்து வரக்கூடிய நிலைமையை யடைந்தாய்'' என்றான்.

சுந்த:—''அய்யோ! இன்றேல் அரண்மனையிலுள்ள வேலைக்காரர்கள் என்ன நினைப்பார்கள். அய்யோ கடவுளே பிறகு என்ன செய்தாய்'' என்றாள்.

இள:—''நான் உன்னை யுன் வாசஸ்தலத்தில் விட்டுவிட்டு, நேராய் டாக்டர் பூபதிப் பிள்ளையின் வீட்டிற்குச் சென்று வாலிபனுக்குப் பிராணபயத் தில்லையென்று தெரிந்துகொண்டபின் போய்ச் சயனித்துக் கொண்டேன். இன்று முன்னமே இங்கு வந்திருப்பேன். ஆனால் அதற்குள் தாயாரிட மிருந்து அந்த விபரீத சங்கதிகளடங்கிய கடிதம் வந்தது. இன்றேல் நான் முன்னமே வந்திருப்பேன். டாக்டருக்குத் தந்திரமாகக் கதை கட்டிவிட்டேன். அவன் புத்தி சூக்கும முடையவன். ஆகையால் இனி அதைப்பற்றி ஒரு கேள்வியும் கேட்கமாட்டான். தானப்பன் விஷயமோ, அவன் அந்த வாலிபனைக் கொண்டுபோய் அங்கு விட்டுவிட்டுச் சென்றபின் இதுகாறும் அவன் சங்கதி யொன்றுமே தெரியவில்லை. ஆனால் அவனை யடியோ டொழித்துவிட நான் ஓரே முடிவாகத் தீர்மானம் செய்துவிட்டிருக்கிறேன்...'' என்றதே,

சுந்தராங்கி ஓகோ இன்னொரு கொலைநடக்க ஏற்பாடாயிருக்கிறது என்று கருதி திடுக்கிட்டு உளம் நடுங்கித் தன் தமையனை நோக்கி யாத்திரத்தோடு,

"ஆ ஆ! எப்படி ஏற்பாடு செய்திருக்கிருய், என்னவித மாய் அவனை நீ யொழிக்கக் கருதியிருக்கிருய்?" என்ருள்.

இள:—"நான் அவனை யொழித்துவிட முன்னமே எல்லா ஏற்பாடும் ஆயத்தமாய்ச் செய்திருந்தேன். அவனுக்கு நமது இரகசியங்களில் அதிகம் தெரிந்திருக்கிறது. இப்போது நமது வாலிபன் விஷயமான சங்கதிகளைக்கூட அவன் எப்படியாவது கண்டுபிடித்துவிடுவான். முன்னமே அவன் அதைப்பற்றி சந்தேகங் கொண்டிருப்பான். அதிலும் இப்போது உன் முகத்தைப் பார்த்திருக்கிருன். எப்படியேனும் நீ யாரென்று தெரிந்துகொண்டானே உடனே உண்மையை யூகித்துக் கொள்வான். அவன் தந்திர சாமார்த்தியங்களில் மிக்கவல்லவன். பிறகு அவன் இந்நாட்டிலிருக்கும் வரையில் நமக்கு மிக்க தொந்திரவேயாகும். அவன் ஈவிதக்க மற்றவன். மனிதரைக் கசக்கிப் பயமுறுத்தி நினைக்கும்போதெல்லாம் பணம் பறிக்கச் சற்றும் பின்னிடையான். அவை யாவுமறிந்தே நான் அவனை யிந்நாட்டை விட்டொழித்துவிடத் தீர்மானித்து விட்டேன்.

அவன் நமது வாலிபனை யிட்டுக்கொண்டு அக்கப்பலில் ஏறிவிட்டால் பிறகு அவன் தன் சுயேச்சைப்படி நடக்கமுடியாது. உடனே யவன் அக்கப்பலிலிருந்து அண்டையிலிருக்கும் வேருெரு கப்பலில் ஏற்றப்பட்டிருப்பான். வாலிபன் எங்கு செல்கிருனென்பதை யிவனறிய முடியாது. இவன் கதி யென்னவாயிற்றென்பதை அவ்வாலிப னறியமுடியாது. அவன் ஒரு தேசம்போய்ச் சேரப்போகிருன். இவன் நேர் மாருன திக்கிலுள்ள வேருெரு தேசம்போய்ச் சேர்வான். அத்தகைய ஏற்பாடு இடையில் இக்கோர சம்பவங்கள் நேர்ந்ததால் தடைப்பட்டது. ஆயினும் ஒன்றும் கெட்டுப் போக

வில்லை. ஆனால் ஆலசியமாய் நடக்க வேண்டியதாயிற்று'' என்றான்.

சுந்த:—"அப்பா! நான் ஒரு தடவையே அவன் முகத்தைக் கண்டதாயினும், அய்யோ கடவுளே! அத்தகைய கோரமான விகார வடிவத்தை நான் இதுவரைக் கண்டதில்லை யாதலால் அவன் நமது நாட்டிலிருக்குமட்டும் என் மனம் பயம்விட்டு நிம்மதியடையாது. அவன் ஒழிந்தாலே எனக்கு நிம்மதி யுண்டாகும்'' என்றாள்.

இள:—"ஆகா! அவன் கட்டாயம் ஒழிந்து போவான்; அதைப்பற்றி நீ சற்றும் கலவர மடையவேண்டாம். இனி நான் செல்லவேண்டும். மாலையில் இரண்டு வேலைகள் இருக்கின்றன. ஒன்று மந்திரிமார் ஏதோ இராஜாங்க விஷயமாய் ஆலோசனை செய்யச் சபை கூடுகிறார்களாம். அது அவ்வளவு முக்கியமான விஷயமல்ல. இன்னொன்று நல்லூர் ஜமீன்தார் வீட்டில் ஒரு நாடகம் நடக்கிறது. அதற்கு வரும்படி நகரிலுள்ள முக்கியமான பிரமுகர்களுக்கும் பிரபுக்களுக்கும் மட்டுமே டிக்கட்டுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது மிக்க முக்கியமான விஷயம். அதற்குப் போகாமலிருந்தால் கௌரவக்குறைவு நேரிடும். ஆகையால் அதற்கு அவசியம் போகவேண்டும். நீயும் வா'' என்றான்.

சுந்த:—"ஆ! நாடகத்திற்கா? என் மனமிருக்கும் கலவரமும் திகிலுமான நிலைமையில் நான் நாடகம் பார்ப்பதென்றால்...'' என்பதற்குள்,

இள:—"சே சே! நீ சுத்த பைத்தியக்காரி. அத்தகைய காட்சிகள்தான் மனதிலுள்ள துயரம் முதலிய கலக்கங்

களைப்போக்கி மனதிற்கு உற்சாகத்தை யளிக்கும். உனக்குப் பிரியமான உன் நண்பர்களையும் அழைத்து வரலாகும். இதோ டிக்கட்டுகள்'' என்று கூறிக் கொண்டே தன் ஜோபியிலிருந்து ஆறு டிக்கட்டுகளை மேஜைமேலெறிந்து, "கட்டாயம் வா; மறந்துவிடாதே'' என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றான்.

சுந்தராங்கிக்கு நாடகத்திற்குச் செல்லச் சற்றும் பிரியமேயில்லை. ஆகையால் கலவரத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அச்சமயம், அவளுடைய தோழிகளில் ஒருத்தி அங்கு வந்து "அம்மா பெரியநாயகிச் சீமாட்டி தங்களைக் காண வந்திருக்கிறார்கள்'' என்றாள். சுந்தராங்கி யச்சீமாட்டியை யுடனே யுள்ளே யழைக்கும்படி கட்டளையிட்டாள். அவள் வந்ததும் இரண்டொரு நிமிடம் இருவரும் க்ஷேமலாபங்களைப்பற்றிச் சம்பாஷித்தார்கள். அதன் பிறகு பெரியநாயகிச் சீமாட்டி தான் கொண்டுவந்த சண்பகத்தின் கடிதத்தைச் சுந்தராங்கியிட மளித்துவிட்டு விடை பெற்றுக் கொண்டு சென்றாள். அவள் சென்றதும் சுந்தராங்கி அக் கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினாள். அதில் பின் வருமாறு வரைந்திருந்தது:—

"என் உயிர்போன்ற பிரியமான அத்தையம்மாளுக்கு வணக்கமாய் எழுதிக்கொண்டது. சற்றுநேரத்திற்கு முன்பு எனக்கும் இராணிக்கும் மிக்க சச்சரவு நடந்தது. அத்தையே! நீ என்மேல் இரக்கம் வைத்து எனக்கு அனுசரணையாய் நடக்கிறாயென்றும் என் தாயார் விஷயத்தில் எனக்கு உதவிசெய்ய உத்தேசித்திருக்கிறாயென்றும், எப்படியோ இராணிக்குத் தெரிந்து விட்டது. இந்த விஷயம் என் மனதிற்குப் பெரிய வியாகூலத்தை யுண்டாக்கி விட்

டிருக்கிறது. என் துயரத்திற்கு அளவேயில்லை. கடவுளே யதை யறியவேண்டும். அவர் ஒருவரே அதற்குச் சகாயம் செய்யத்தக்கவர். என்னுடைய ஆபத்துகள் ஒன்றின்மே லொன்றாய் வளர்கின்றன. இப்போது தான் உன் ஆதரணை யும் அன்பும் எனக்கு அதிகமாய் வேண்டும். அய்யோ நான் உன்னிடம் ஒடி வந்திருப்பேன். ஆனால் என் கொடுமை வாய்ந்த பாட்டியார் என்னை யரண்மனையிலேயே சிறைப் படுத்தி யிருக்கிறாள். என் வேலைக்காரர்களே என் காவலர்க ளாக ஏற்படுத்தப்பட் டிருக்கிறார்கள். நான் அரண்மனைத் தோட்டத்தின் எல்லையைக்கடந்து அடியெடுத்து வைப்பதா யின் அவர்கள் தடுத்துவிடுவார்கள். பெரியநாயகிச் சீமாட்டி என்மேல் இரக்கம் வைத்து அன்பு பாராட்டினதால் இக்கடி தத்தையாவது உனக்கனுப்பச் சமயம் வாய்ந்தது. சமயம் வாய்க்கும்போது தயைசெய்து என்னை வந்து பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறேன். என் பாட்டியார்செய்யும் முயற்சி களுக்கஞ்சி என் தாயாருக்கு உதவிசெய்வதை விட்டு விடாதே. ஒருசமயம் ஜகதீசன் என்ற வாலிபன் நீ கோரிய படி யுன்னைக்காண வராவிடின் யாராவது நம்பிக்கையான ஆள்வசம் என் தாயார்க்கு ஒரு சிறு எச்சரிக்கைமட்டும் அனுப்பிவிடு. ஓ! என் நம்பிக்கை முழுமையும் இப்போது உன்னிடத்திலேயே வைத்திருக்கிறேன். வேறொரு ஆதரவும் எனக்கில்லை. என்கோரிக்கையை மறந்துவிடாதே. அசட்டை செய்து விடாதே. அத்தாய்! எனக்கு இவ்விஷயங்களைப் பற்றி கடிதம் எழுதாதே. சமயம் நேரிடும்போது அவசியம் வந்து பார். என் மனோவேதனையும் நானிருக்கும் நிலைமையும் ஆண்டவன் ஒருவரே அறிவார்.

சுந்தராங்கியின் மனம் அச்சமயம் இருந்த துயரமும் கலவரமுமாகிய நிலைமையில் இக்கடிதம் அவளுக்குச் சற்றும்

ஆறுதலை யுண்டாக்கவில்லை. பெரியநாயகி சென்றதே அவள் நாற்காலியில் சாய்ந்து ஆழ்ந்த சிந்தனையி லிருந்தாள்.

தன் தமையன் அத்தகைய சதியாலோசனை நடக்கவே யில்லையென்று வாக்குறுதி கூறியதைப்பற்றி சிந்தித்தாள். அவன் கூறியது மனப்பூர்வமான உண்மைதானா? என்று யோசித்தாள். தன் தாயின் கொடுமையை நினைத்தபோது அவள் மனம் பதைத்தது. தன்னையீன்ற சொந்தத்தாயாரே அத்தகைய அக்கிரமமான பாதகச்செயலுக் குட்பட்டிருக் கிறளென்று சுலபமாய் அவள் எப்படி நம்பிக்கொள்ளக் கூடும். ஒருபுறம் சண்பகம் எழுதிய கடிதத்தைப் பார்த்தால் தன் பாட்டியாரிடம் அவள் சச்சரவிட்ட பின்பும் சதி யாலோசனை நடக்கிறதென்பதில் அவளுக்குச் சந்தேக முண் டாகவில்லையென்று தெரிகிறது. கடைசியில் அவள் மனதில் அதைப்பற்றிய சந்தேகம் ஒழியவேயில்லை. ஆகையால் தான் இதைப்பற்றித் தீர ஆலோசிக்கிறவரையில் மறுபடி இவ்விஷ யத்தில் தலையிடக்கூடாதென்று தீர்மானித்துக்கொண்டாள். ஆகையால் தன் தமையனுக்கு வாக்களித்தபடி ஜகதீசனுக்கு மறுபடி கடிதம் எழுதவில்லை. அவன் தன்னைக் காணவந் தால் உள்ளே விடவேண்டாமென்று தன் ஆட்காரருக்குக் கட்டளையிடவுமில்லை. சண்பகத்தைக்காணச் செல்லவுமில்லை. எல்லாம் நாளைக்குப் பார்ப்போம் என்று இருந்தாள்.

மறுநாள் என்ன நடந்தது? காலை சுந்தராங்கி போசனம் செய்துவிட்டுத் தன் அறையில் உட்கார்ந்து கொண்டிருக் கையில், வேலைக்காரி வந்து அவளை நோக்கி, "அம்மா! யாரோ ஒருவர் ஜகதீசன் என்பவர் வந்து தங்களைக் காண வந்திருப்பதாய்க் கூறுகிறுர்" என்றுள். சுந்தராங்கி சற்று நேரம் சிந்தித்தாள். பிறகு வேலைக்காரியை நோக்கி, "அவரை யுள்ளே யழைத்துவா" என்றுள்.

ஜகதீசன் அறைக்குள் வந்ததும் அவன் வதனத்தைக் கண்டதே அவன் மிக்க பெருந்தன்மையும் மிக்க கம்பீரமான குணங்களேயும் உடையவனென்று அவள் மனதிற் பட்ட படியால் அவன்மேல் மிக்க நம்பிக்கையும் பிரியமும் மரி யாதையு முண்டாய்விட்டது. சாதாரண காலங்களில் அவ னுடைய வனப்பே யவளுக்குப் பிரிய முண்டாய் விட் டிருக்குமெனினும், அச்சமயம் அவனுடைய கம்பீரமான குணமே அவளுக்கு அவன்மேல் பிரிய முண்டாக்கி விட் டது. இத்தகைய் முகத்தையுடையவன் சூது, வாது தூர்ச் சிந்தனே முதலிய யாவுமின்றி மிக்க உதாரகுணமும் உயர்ந்த நடக்கையு முடையவனென்று அவள் மனதிற் பட்டுவிட் டது. அதனுல் அவனே மிக்க அன்போடும் மரியாதை யோடும் ஆசனத்தில் உட்காரும்படி உபசாரம் செய்தாள். ஜகதீசன் உட்கார்ந்ததே அவள் அவனே நோக்கி, "நான் கோரியபடி தாங்கள் வந்ததற்காக மிக்க வந்தன மளிக்கி றேன். எனக்கு மிக்க சந்தேகம். முதலாவது நான் முன் பின் கண்டிராத ஒருவர்க்கு அத்தகைய கடிதம் எழுதி யிருக் கிறேன். இரண்டாவது அக்கடிதம் தங்களுடைய கையில் சிக்கியதோ இல்லேயோ என்பது. மூன்ருவது நான் உம் மைப்பற்றி கேள்விப்பட்ட விஷயங்கள் உண்மைதானு வென்ற சந்தேகம்" என்ருள்.

ஜகதீசன்:—"தாங்கள் கேள்விப்பட்டது என்ன சங்கதி?" என்ருன்.

சுந்த:—"இளவரசியைப்பற்றி யொரு சதியாலோசனே நடக் கிறதென்பதும், அதை யெப்படியோ தாம் கேள்விப் பட்டு இளவரசியின்மேல் இரக்கங்கொண்டு உதவி செய்ய முயன்றதாகவும், அதனுல் தாங்கள் சிறையி லடைக்கப்பட்டதாகவும், பிறகு நமது நாட்டார்

யாரோ வந்து தங்களை மீட்டதாகவும் கேள்விப்பட்டேன்'' என்றாள்.

ஜகதீசன்:—இப்போது தாங்கள் கூறிய யாவும் சத்தியமே. ஆனால் இந்த சங்கதியாவும் தங்களுக்கு எப்படித்தெரிந்தது.'' என்றான்.

சுந்த:—"ஆ! நீர் கேட்பது சரியே, ஏனெனில் எனக்கு இச் சங்கதிகள் யாவும் தெரிந்திருக்கிறவரையில் நானும் அச்சதியாலோசனையில் சேர்ந்திருக்கிறேனோவென்று உனக்குச் சந்தேகம் உண்டாவது சுபாவமே. ஆகையால் இதோ விக்கடிதத்தைப்பார்'' என்று சண்பகம் தனக்கெழுதிய கடிதத்தை யெடுத்து அவனிடம் அளித்தாள். ஜகதீசன் அதை வாசித்துப் பார்த்ததும் சுந்தராங்கி அச்சதியாலோசனையில் சேர்ந்தவளல்லவென்றும் அவள் உண்மையானவளே யென்றும் அறிந்து கொண்டான். அவன் அவளை நோக்கி,

"இராஜகுமாரியே! இப்போது தாங்கள் அச்சதியாலோசனையில் சம்பந்தப்பட்டவர்க ளல்லவென்று நன்றாயறிந்து கொண்டேன். நான் முதலில் ஐயங்கொண்டதற்காக மன்னிக்கக் கோருகிறேன்'' என்றான்.

சுந்த:—"இல்லையில்லை. தாங்கள் சந்தேகப்படத்தகுந்த காரணம் இருக்கிறது. ஆனால் என் சகோதராாகிய இளவாசர் அத்தகைய சதியாலோசனை நடைபெறவேயில்லையென்று உறுதியாய்க் கூறினார் அதுதான்...'' என்றாள்.

ஜகதீசன்;—"இப்போது அச்சதியாலோசனைப்படி சுகசிங்கம்பிரபுவின் உதவியால் வேவுகாரரைப்போல் இளவரசியிடம்போய்ச் சேர்ந்திருக்கிறவர்கள் மாகதம்மாளின்

புத்திரிகளாகிய இரங்கம்மாள், ஜானகி, அம்புஜம் என்ற மூவர்கள். அவர்களில் இரங்கம்மாள் அம்புஜம் இருவருமே இச்சதியாலோசனை நடப்பதாகவும் அதற்காகவே தாங்கள் அங்கு வந்திருப்பதாகவும் என்னிடம் கூறினார்கள். இது மட்டுமல்ல. மாரகதவல்லியம்மாளுடைய கடைசி புத்திரியாகிய மீனம்பாள் அத்தகைய அக்கிரமச்செய்கைக்கு உடன்படப் பிரியமில்லாமலே அவர்களைவிட்டு ஓடிவந்துவிட்டிருக்கிறாள். அவள் வாக்காலும் யாவும் கேட்டேன். இவையன்றி வேறு அனேக அத்தாட்சிகளிருக்கின்றன. இன்னொரு முக்கிய விஷயம். அதாவது பருதிபுரப்போலீஸ் பிரதம அதிகாரி என்னை விடுதலை செய்துவிடுவதாகக் கூறிய நிபந்தனைகளாலேயே அத்தகையச் சதியாலோசனை நடப்பது சத்தியமென்றும் அதற்கு முதலாளிகள் மிக்க அதிகாரமும் செல்வாக்கு முடையவர்களென்றும், அவர் தூண்டுதலாலேயே நான் அங்கு சிறை வைக்கப்பட்டேனென்றும் சற்றும் ஐயமின்றி எனக்குப் புலப்பட்டு விட்டது'' என்று அங்கு நடந்த சங்கதிகள் யாவும் விரிவாய்க் கூறினான்.

சுந்தராங்கிக்கு உண்மை நன்றாய் விளங்கி விட்டது. கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகம் யாவும் பறந்து போயின. ஜகதீசன் கூறியவனைத்தும் உண்மையேயென்றும், தன் தமையன் மனதார அசத்தியம் செய்து உண்மையை யடியோடு மறைத்துக் கூறினானென்றும் தெரிந்து கொண்டாள். உடனே அவள் ஜகதீசனை நோக்கி,

"நண்பரே! இப்போது நாம் ஒரு பிரமாதமான விஷய சம்பந்தமாய் இருவரும் சந்தித்துப் பேசுகிறோம்! ஆகையால் நமக்குள் பரஸ்பரம் ஒருவர்மேல் ஒருவர்க்கு எள்ளளவு

சந்தேகமாவது இருத்தல் கூடாது. சற்று முன்பு நானும் அச்சதியாலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டவனென்று நீர் சந்தேகப்பட்டீர். நான் தக்க அத்தாட்சி கூறி அச்சந்தேகத்தை நிவர்த்திசெய்து விட்டேன். அதேமாதிரி என் மனதிலுள்ள ஒரு சந்தேகத்தைத் தாங்கள் நிவர்த்திசெய்ய வேண்டும். தாங்கள் உண்மையான யோக்கியரல்லவென்றும், மாறுபெயர் வைத்துக்கொண்டு...'' என்பதற்குள்,

ஜகதீசன் முகத்தில் ஒருவிதப் பிரகாசமும் புன்னகையுமுண்டாயின. அவன் உடனே சுந்தராங்கியிடம் சில சங்கதிகளைக் கூறினான். ஆனால் நாம் இன்னும் அவ்விஷயங்களை மர்மமாகவே வைத்திருக்கவேண்டி யிருப்பதால் ஈண்டு அதை வெளியிடற்கில்லை. அவன் கூறியவற்றைக் கேட்ட மாத்திரத்தில் சுந்தராங்கியின் உளம்பூரித்து, அவனைச் சந்தித்ததற்காக மிக்க சந்தோஷமடைந்தாள். இப்போது அவன் சுத்தவீரனென்றும் உத்தமகுணங்களையும் பெருந்தன்மையையும் உடையவனென்றும் இழிவான குணங்கள் அவன் மனதில் உதிக்கவே மாட்டாவென்றும் மனப்பூர்வமாய் உணர்ந்தாள். அதோடு அவனை யவர்கள் சிறைசெய்ய வெளிக்குக் காரணம் கிடைத்தவழி யின்னதென்றும இப்போது அவள் உணர்ந்தாள்.

அதன்பிறகு அவர்கள் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இளவரசியின் ஆபத்தான நிலைமையையும், அதற்குச் செய்யவேண்டிய வேலைகளையும், எதிரிகளால் உண்டாகக்கூடிய இடையூறுகளையும், இடையில் நேரிடக்கூடிய ஆபத்துகளையும் யாவற்றையும் தீர ஆலோசித்தார்கள்.

சுந்தராங்கி ஜகதீசனை நோக்கி ''உமக்காகப் பருதிபுரத்திற்கு வந்து அவ்வளவு தந்திர சாமார்த்தியமாய் உம்மை மீட்டுவந்தவர்கள் யார் என்பதை யறிவீரா?'' என்றாள்.

ஜகதீசன்:—"உண்மையில் எனக்கு அவர்கள் யாரென்று விளங்கவில்லை. அந்த மூவரில் ஒருவர் பிரபு, மற்றொருவர் காப்டென் என்றழைக்கப்படுகிறார். மூன்றாவதாளின்பெயர் எச்சன். இவ்வளவே அவர்களைப்பற்றி நானறிந்தது. ஆனால் நான் காதலித்திருக்கும் கோமளவல்லியென்ற கன்னிகையின் தமக்கையாகிய கற்பகவல்லியென்ற மாதே அவர்களை யனுப்பி யிருக்கவேண்டும் என்று என்மனதில் நன்றாய்ப்படுகிறது. இன்று மாலையாவது நாளை காலையாவது நான் அம்மாதைக் காணச்செல்வேன். அப்போது இந்த விஷயத்தைப் பற்றிய உண்மை விவரத்தை யறிந்து கொள்ளலாகும் என்று பூரணமாய் நம்பி யிருக்கிறேன்." என்றான்.

சுந்த:—அப்படியானால் விடுதலை யடைந்ததே நோய்க் கந்தபுரிக்குச் சென்றீராக்கும்.

ஜகதீசன்:—ஆம் உண்மையைக் கூறுகிறேன். என் காதலியின் மனக்கலக்கத்தை நீக்கவேண்டியதே என் முதல் கடமையாயிருந்தது. தங்கள் கடிதம் வாரதிருந்தால் இன்னும் இரண்டு மூன்று தினங்களில் புறப்படுவதற்கே யிருந்தேன். ஆனால் பருகிபுரமார்க்கமாய்ச் செல்லாமல் அண்டையிலுள்ள நாடுகளின் வழியாய்ச் செல்வதென்று தீர்மானித்திருந்தேன்.

சுந்த.—"ஆ! இப்போதும் அந்த ஏற்பாட்டின்படிக்கே நடக்கலாகாதோ? என் தமையன் மனைவிக்கு நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன்" என்றாள்.

அச்சமயம் ஜகதீசன் மனதில் ஒரு யோசனை யுதித்தது. அவன் சுந்தராங்கியை நோக்கி, "அம்மா! என் மனதில் ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அதாவது, நான் இளவா

சனை மட்டும் ஒருதரம் சந்தித்தால் எப்படியாவது நயபயத்தாலும் வேண்டுதலாலும் அவர் மனதைத் திருப்பிவிடக்கூடும் என்று நம்புகிறேன்'' என்ருன்.

சுந்த:—''அந்தோ! அது வீண் முயற்சி. இளவரசன் உம்மைக் காணமாட்டான். நீர் யார் என்று தெரிந்தாலே உம்மை யுள்ளே விடக்கூடாதென்று கட்டளை யிட்டு விடுவான். அவன் ஒரு முரட்டுப் பிடிவாதக்காரன்'' என்று துயரத்தோடு மொழிந்தாள்.

ஜகதீசன்:—''நான் மட்டும் எப்படியாவது அவரை யொரு வேளை சந்தித்தால் என்னுல் கூடியவரை முயற்சிசெய்து பார்த்தே தீர்வேன். தோல்வி யடைந்தாலும் என்னுலான முயற்சியைச் செய்தேன் என்ற திருப்தியாவதிருக்கும்'' என்ருன்.

அச்சமயம் சுந்தராங்கி தன் எதிரிலிருந்த மேஜையை நோக்கிச் சற்று சிந்தித்து, ஜகதீசனை நோக்கி, ''ஆம், உன் இனிய மொழிகளால் ஒரு சமயம் இளவரசன் மனதைக் கரைத்தாலும் கரைத்துவிடலாகும். ஆ! அதற்குத் தக்க இராட்சாபந்தனம் இருக்கிறது'' என்று கூறிக்கொண்டே எழுந்துபோய் தன் மேஜையிலிருந்து ஒரு அச்சடித்த சீட்டைக் கொண்டுவந்து அவனிட மளித்தாள். அவள் தமையன் இரண்டு தினங்களுக்குமுன் அத்தகைய சீட்டுகள் நாலைந்து அவளிடம் கொடுத்துச்சென்ருன். அச்சீட்டை இளவரசன் வசிக்கும் அரண்மனை வாயிலில் காட்டினதே (வேலைக்காரர்கள் மூலமாய்) அதைக் கொண்டு வருபவர்களுக்கு இளவரசன் தரிசனம் கிடைக்கும்.

ஜகதீசன் அதைப் பெற்றுக்கொண்டு சந்தோஷத்தோடு அங்கிருந்து புறப்பட்டான். அன்றிரவு இளவரசன் மாளிகை

யில் ஒரு நாடகம் நடக்கிறது. அதில் நாடக பாத்திரங்கள் இளவரசனும் அவன் நண்பர்களாகிய ஆடவரும் மாதர்களுமே. அன்று நாடகம் அவர்கள் தேசாசாரப்படி நடத்தப்படும் மன்மதனுடைய சரித்திரத்தின் ஓர் பாகம். அதில் இளவரசனே கதாநாயகனுகவும் மதனவல்லியேகதாநாயகியாகிய இரதியாகவும் நடிக்கிறுர்கள்.

சுமார் ஒன்பது மணிக்கு ஜகதீசன் இளவரசன் அரண்மனேக்குச் சென்று சீட்டைக்காட்டி யுள்ளே சென்றுன். அச்சமயம் நாடகசாலேயாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் பாகத்தில் இளவரசன் இருப்பதாகவும் இந்நேரம் நாடகம் ஆரம்பமா யிருக்குமென்றும் கேள்விப்பட்டு அங்கு சென்றுன். நாடகம் ஆரம்ப மாய்விட்டதால் தானும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து பார்த்துக்கொண் டிருந்தான். சற்றுநேரம் கழித்து இரதி சபைக்கு வந்தாள். அவள் நடிப்பும் சங்கீதமும், சாதுரியமான வார்த்தைகளும் யாவர்க்கும் சந்தோஷத்தையும் வியப்பையும் உண்டாக்கவே யாவரும் கரகோஷம் செய்து அவளேப் புகழ்ந்து கொண்டாடினுர்கள். அச்சமயம் ஜகதீசனும் அவளே யுற்று நோக்கினுன்.

அவள் முகத்தைக் கண்டதும் ஒருவித சந்தேகம் கொண்டு திடுக்கிட்டான். மறுவிடிை "சேசே! அப்படியிராது" என்று கருதினுன். ஆயினும் முதலில் உண்டான சந்தேகம் அவன் மனதில் வேரூன்றிக் கொண்டது. ஆகையால் அவன் மனமும் கண்களும் அவள்மீதே சென்றன. அவள் அங்கங்களேயும் சாயலேயும் பார்க்கப் பார்க்க அவன் சந்தேகம் பலப்பட்டுக்கொண்டே வந்தது. அதோடு அவள் குரலேக் கேட்டதும் இன்னமும் பலப்பட்டது. அவன் இருதயம் பிளந்துவிடும்போ லிருந்தது. மற்ற சங்கதிகள் யாவும் மறந்தான். "அய்யோ கடவுளே! அவளாகவே யிருக்

குமோ? அவள்தானோ?" என்று எண்ணியதும் அவன் மனம் சொல்லொணு வேதனை யடைந்தது. பார்க்கப் பார்க்கக் கடைசியில் தான் கருதியது உண்மையாகவே தோன்றியது. தான் "சே! அவள் என் இத்தகையதொழில்களுக்கும் செய்கைகளுக்கும் உடன்படவேண்டும். அவளா யிராது" என்று என்னதான் தன் மனதிற்குச் சமாதானம் கூறினும் மனசாட்சிக்கு தான் சந்தேகப்பட்டதே யுண்மையென்று தோன்றுகிறது.

நாடகத்தில் நடக்கும் களிப்பாட்டங்களும் அக்காட்சி முழுமையும் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. கடைசியில் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு அண்டையிலுட்கார்ந்திருந்தவனை நோக்கி இரதிவேடம் அணிந்திருப்பது யார் என்று வினவினன். அதற்கு அம்மனிதன் வியப்போடு ஜகதீசன் முகத்தை நோக்கி, "இதென்ன? செல்லப்பப்பிரபுவியின் மனைவியும் இளவரசன் அந்தரங்க...மாகிய மதனவல்லிச் சீமாட்டியை யிதுகாறும் நீர் கண்டதில்லையா?" என்றான்.

இதைக்கேட்டதே நோய் அவனுடைய இருதயத்தின்மேல் ஒரு பெரிய பாறுங்கல் விழுந்ததுபோலிருந்தது. அவன் ஆவிசோர்ந்து தலைகவிழ்ந்து இரு அங்கைகளின் மேலும் முகத்தை வைத்துக்கொண்டான். அதேசமயம் நாடகமேடையில் ஏதோ விசேட சம்பவம் நடந்ததால் யாவரும் பெரிய சந்தோஷ கோஷ்டமிட்டார்கள். இன்றேல் ஜகதீசன் "அய்யோ தெய்வமே இப்படியும் நேருமோ" என்று போட்ட சத்தம் யாவர்க்கும் கேட்டே யிருக்கும்.

அவன் மனதில் உண்டான துயரத்திற்கு அளவேயில்லை. "ஆ கடவுளே! இப்போது எல்லா சங்கதியும்

தெரிந்துகொண்டேன். ஆம் ஆம்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். அதற்குமேல் ஒரு விநாடிகூட அங்கிருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. துரிதமா யெழுந்து அந்த விடத்தைவிட்டு அகன்று இளவாசன் வேலைக்காரரில் ஒருவனைக்கண்டு, "நாடகசாலையிலிருக்க எனக்கு தேகம் அசௌக்கியமா யிருக்கிறது. ஆனால் நான் மிக்க அவசியமாக இளவாசரைக்கண்டு ஒரு வார்த்தை பேசவேண்டும். ஆகையால் அவரை நான் தரிசிக்கக்கூடிய ஒரு இடத்தைக் காட்டினால் அங்கு நான் காத்திருந்து அவர் வரும்போது பார்ப்பேன்'' என்றான். வேலைக்காரன் அவ்வாறே அவனை யலங்காரம் செய்யப்பட்டிருந்த ஒரு அறையில் உட்கார வைத்துவிட்டு "தங்கள் பெயர் என்னவென்று கூற?'' என்று கேட்டான். ஜகதீசன் உடனே ஒரு சிறு சீட்டெழுதி யவனிட மளித்தான்.

சுமார் பனிரண்டுமணிக்கு நாடகம் முடிந்ததும் யாவரும் விருந்துண்ண உட்கார்ந்தார்கள். மிக்க உயர்தரமான அறுசுவை யுண்டிகளமைந்த இராஜபோஜனமும் உயர்தாக் குடி வகைகளும் தாராளமாய்ப் பரிமாறப்பட்டன. இளவாசர் மிக்க தாராளமாய்ப் பானவகைகளை யருந்திவிட்டதால் போஜனம் முடிந்து யாவரும் தங்கள் தங்கள் மாளிகைக்குப் புறப்படும்போது இளவாசன் நாற்காலியிலேயே உறக்கத்திலிருந்தான். இடையில் வேலைக்காரன் ஜகதீசன் கொடுத்த சீட்டைத் தன்னிடமளித்தபோது இளவாசன் அதை வாசித்துப் பார்த்துவிட்டு ஜேபியில் வைத்துக்கொண்டான். ஆனால் மறுநிமிடமே யச்சம்பவத்தை யடியோடு மறந்துவிட்டான். அச்சீட்டில், "கனம்பொருந்திய மகிமையுடைய மகாராஜா இளவாசர் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு, அடியேன் தங்களிடம் ஒருவார்த்தை பேசவேண்டி யிருப்பதால் அதன்

அவசியத்தைக்கருதி அடியேனுக்கு இரண்டு நிமிஷங்கள் தரிசனமளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அடிமை
- ஜகதீசன்''

என்று எழுதப்பட்டிருந்தது.

நாடகசாலையிலிருந்த அனைவரும் சென்றபின் இளவரசனை மெதுவாய்ப் படுக்கைக்குக் கொண்டு போவதற்காக அவனுடைய வேலையாட்களி லிருவர் வந்து அவனை மெதுவாய் எழுப்பினார்கள். அவன் வாய் குழறிக்கொண்டே, "ஓ—சட்—சட்—நான் சரியாகவே சரி...'' என்று கூறித் தள்ளாடிக்கொண்டே எழுந்து நின்றான். வேலைக்காரர் அவனைப் பக்குவமாய்ப் பிடித் தழைத்துக்கொண்டு செல்லும் போது இடையில் ஜகதீசன் இருக்கும் அறையருகில் வரும் போது, "மகாராஜா! சீட்டுகொடுத்த பெரிம மனிதர் தங்களைக்காணக் காத்துக்கொண்டிருக்கிறாரே'' என்று நினைப்பூட்டினார்கள். இளவரசன் "ஆ—அவன்—சே—சனி—பார்க்கிறேன்—இப்போ —ஏதோ—'' என்றான். வேலைக்காரர் ஜகதீசன் இருக்கும் அறையின் கதவருகில் அவனை விட்டு விட்டுச் சமீபத்திலிருக்கும் அவன் படுக்கையறை யருகிற் சென்றார்கள்.

ஜகதீசன் சுமார் மூன்றுமணி நேரம் காத்திருந்தான். மணியோ ஒன்றடித்து விட்டது. முன்னமே யவன் மனம் மிக்க வெருப்படைந்திருக்கிறது. தான் அவ்வளவு தூரம் வந்துவிட்ட வரையில் இளவரசனைக் கண்டு தன்னால் கூடிய வரையில் அவன் மனதைத் திருப்பப்பார்க்கவேண்டுமென்றே காத்துக்கொண்டிருந்தான். அந்நேர மாய்விடவே "சே, இன்னும் காத்திருப்பது வீண்போலும்'' என்று எழுந்தான்.

அச்சமயம் அறையின் கதவருகில் யாரோ வருவதுபோன்ற ஆள் அரவம் கேட்டு நிதானித்து நின்று அத்திக்கை நோக்கி ஞன்.

மறுநிமிடம் கதவு திறக்கப்பட்டதும் இளவரசன் அறைக்குள் அடியெடுத்து வைப்பதைக் கண்டான். இள வரசன் நடக்க மிக்க கஷ்டப்பட்டுக்கொண்டே "எக்-அடே. அடே—நீ—நீ--காண முக்கிய சமாசா—பேசு—சீக்கிரம்..." என்று குழறிக்கொண்டே ஒரு முழ தூரம் உள்ளே வந்த வன் முன்னும் பின்னும் சாய்ந்து "ஒ இந்தவிடம் மிக்க மேடு—பள்ளம்..." என்று கூறிக்கொண்டே சமாளிக்க முடி யாமல் அடியற்ற மரம்போல் கீழே விரிக்கப்பட்டிருந்த ஜமக் காளத்தின்மேல் விழுந்து விட்டான். ஜகதீசன் பின்னும் மிக்க மனவெறுப்படைந்து வேலைக்காரரை யழைக்கும் மணிக்கயிற்றைப் பலமா யிழுத்துவிட்டு அரண்மனையை விட்டு வெளியிற் புறப்பட்டான்.

மறுநாட் காலை ஜகதீசன் சுந்தராங்கி இராஜகுமாரியைக் கண்டு அவளிடம் சுமார் ஒருமணிநேரம் பேசிக்கொண் டிருந்து பிறகு அவளிடம் விடைபெற்றுக்கொண்டு அங் கிருந்து புறப்பட்டுத் தான் தங்கியிருக்கு மிடத்திற்குச் சென்று, உடனே மதனவல்லியென்கிற கற்பகவல்லிக்கு ஒரு பெரிய கடிதம் எழுதி யொரு ஆள்வசம் அதை யனுப்பி விட்டு, தபால் வண்டியிலேறி இரவு சுமார் பத்துமணிக்குள் கந்தபுரிபோய்ச் சேர்ந்தான்.

94 - வது அத்தியாயம்

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் காலை குமாரவேல் பிரபுவின் மாளிகையில் போஜனகூடத்தில் பார்ப்போமானால் அப்பிரபுவும் அவர் மனைவியும் பலகாரம் காபி முதலிய வருந்திக்கொண்டே சம்பாஷணையிலிருக்கக் காணலாம். முதலில் அவர்கள் அங்கொருவார்த்தையிங்கொரு வார்த்தையாய் மெதுவாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். வரவர அவர்கள் சம்பாஷணை தீக்ஷண்யமுடையதாய் மாறியபிறகு சற்றுநேரத்திற்குள் மிக்க கோபத்தோடும் விரோதத்தோடும் கூடிய சச்சரவாய் முடிந்தது.

நேயர்களே! சதிபுருடர் இருவர்களும் மனமொத்து பரஸ்பர அன்போடு இல்லறம் நடத்தினாலே அவர்களுக்குச் சந்தோஷமும் நிம்மதியும் உண்டு. குடும்பத்தில், அது மிக்க செல்வம் பொருந்தியதாயினும் சரி, ஏழ்மை நிலைமையிலிருப்பதாயினும் சரி, சுகத்தோடு துக்கமும், நன்மையோடு துன்பமும் சம்பவித்துக்கொண்டுதா னிருக்கும். ஆனால் மேற்கண்டபடி சதிபுருடர் இருவரும் பரஸ்பரம் உண்மை அன்புடையோரா யிருப்பின் அக்கஷ்டங்கள் தோற்றப்பட மாட்டா. அப்படிக்கின்றி அவர்களுக்குள் அடிக்கடிச் சச்சரவு நேர்வதாயினும் இருவர்க்கும் குடும்பத்தில் சுகமில்லையென்பது திண்ணம். புருடன் மனைவிக்குள் நேரிடும் எவ்வித மனத்தாபங்களும் ஒருசமயம் காலக்கிரமத்தில் அல்லது சீக்கிரத்திலேயே மறுபடி சமாதானமாய் விடவும் கூடும் ஆனால் அதுவும் பூரணமான சுகவாழ்விற்கு ஊனம் செய்யக் கூடியதே. மனதில் உறுத்தத்தக்க வருத்தம் ஒருபோதும் நிலையான அன்பிற்கு இடமளிக்காது ஒருவர்மே லொரு

வர்க்கு மனஸ்தாபம் நேரிடாமல் இருக்கும் நட்பே உத்தம நிலையிலிருக்கும். "நெல்லினுமி சிறிது நீங்கிப் பழமை போல் புல்லினும் திண்மை நிலைபோம்" என்று ஆன்றோர் கூறியபடி மனஸ்தாபம் ஒருதாம் உண்டாகிப் பிறகு சமாதானம் ஏற்பட்டாலும் அந்த நேசத்திற்கு முன்னிருந்த வலிமையு மொற்றுமையு மிருப்பது மிக்க கடினம். இது உலக அனுபவமாய்க் காணத்தக்கது. இத்தகைய சச்சரவுகளைவிட்டு, சதிபுருடரில் ஒருவரையொருவர் துரோகம் செய்வதாய்ச் சந்தேகம் உண்டாயின பிறகு அவர்களுக்குள் ஒற்றுமையாவது அன்பாவது ஏற்படுவது மிக்க கஷ்டம். ஆகையால் அத்தகைய சந்தேகங்கள் உண்டாகாவண்ணம் புருடன் மனைவி இருவருமே எப்போதும் மிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சில புருடர்கள், ஸ்திரீகள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும், புருடன் பாஸ்திரீகமனம் செய்வதால் குற்றமில்லையென்று கருதுகிறார்கள். அந்தோ இவ் விஷயத்தில் இருவர்க்கும் சமதண்டனையே ஆண்டவனளிப்பார். ஆணுயினும் பெண்ணுயினும் மனம் ஒருவித சுபாவமுடையதே. மனைவி தன்னைத் துரோகம்செய்து பரபுருஷனைக் காதலித்தால் புருடன் எத்தகைய மனவருத்தம் அடைவானே, அத்தகைய மனோவருத்தமே புருடனால் துரோகம் செய்யப்பட்ட மனைவியுமடைவாள். ஆனால் அதனால் உண்டாகும் கோபத்தையும், வெறுப்பையும், வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் குணத்தையும் ஆடவர் காட்டுவதுபோல் மாதர்களில் பெரும்பாலோர் வெளியிடுவதில்லை. அத்துயரத்தை மனதில் வைத்துக்கொண்டே மங்கிபங்கி ஆவியொடுங்கி அவதிப்படுகிறார்கள் என்பது சத்தியம். பொறாமை, துவேஷம் முதலிய குணங்கள் ஆடவர்களைவிட ஸ்திரீகளுக்கே அதிகமாயிருப்பது சுபாவம். ஆகையால் ஆடவர் இவ்வுண்மையை மனதில் வைத்து நடப்பதே புத்திசாலித்தனமாகும்.

குமாரவேல் பிரபுவுக்குத் தன் மனைவியாகிய ஏகநாயகி மேல் முன்னமே சந்தேகங்கள் உண்டானதையும் அவற்றிற்கு அத்தாட்சி தவறிவிட்டதும் மற்றசங்கதியும் நேயர்கள் அறிந்திருப்பதே. இப்போது இருவருக்குள்ளும் அதைப் பற்றியே சச்சரவு உண்டாயிற்று. அது வரவா முற்றி இருவர்க்கும் கடுமையான வாக்குவாத முண்டாயிற்று. பிரபு கடைசியில், "நீ எவ்வளவுதான் சாமார்த்தியமும் தந்திரமுமாகிய இந்திரஜாலங்களெல்லாம் செய்தாலும், நடந்தவைத்தும், என் கையெழுத்தைக் கள்ளத்தனமாய்ப்போட்டு உன் கள்ளப் புருஷனுக்காக கள்ள உண்டிகளைப் பிறப்பித்ததும், உன் தோழியாகிய கள்ளவேசை உனக்கு முழுவுடந்தையாயிருப்பதும், நீயுன் விபசாரத்தொழிலுக்குச் செல்லும்போதெல்லாம், நீ அவளைப்போல் வேடமணிந்து செல்வதும், அச்சமயங்களில் அவள் உன் உடைகளை யுடுத்து உன்போல் மாறுவேடமணிந்து வீட்டிலிருப்பதும் யாவும் மெய்யென்று நான் அறிவேன். ஆகையால் நமது கலியாண ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வதைவிட வேறு வழியில்லை" என்றார்.

ஏகநாயகிச்சீமாட்டி மிக்க திகிலும் கோபமுமடைந்து "ஓ! அபாண்டம். நீ கூறுவதெல்லாம் பொய். அப்படி கலியாணசம்பந்தத்தை யுடைத்துக் கொள்வதாயின் நீ என்மேல் அபாண்டம் சுமத்தி என்னைக் குரூரமாய் நடத்துகிறாயென்று நானே நீதவானிடம் சென்று நமது சம்பந்தத்தை இரத்து செய்துக்கொள்ளவேண்டும்" என்று உண்மையாகவே நிரபராதிபோல் நடித்தாள். பிரபு புன்னகை புரிந்துகொண்டே "பேஷ் நாடகத்தில் நடிக்க நீ மிக்க தகுதியுடையவள்; ஆயினும் சொன்னதை யப்படியே யாவரும் நம்பிக்கொள்ள இது நாடகமல்ல. உண்மை எப்படியும் தக்க அத்தாட்சிகளோடு வெளிவந்து விடுமென்பது உண்மை" என்றார்.

186580.

சீமாட்டி பின்னும் கோபத்தோடு கூச்சலிடத் தொடங்கினாள். அச்சமயம் ஒருவேலைக்காரன் பிரபுவினருகில் வந்து இரகசியமாய் "யாரோ ஒரு வாலிபன் தங்களை யவசியம் காணவேண்டுமென்று கூறுகிறான்" என்றான். பிரபு உடனே அங்கிருந்து புறப்பட்டுத் தன் அறைக்குச்சென்று உடுத்திக்கொண்டு வேலைக்காரனை நோக்கி அவன் பெயரென்னவென்றார். வேலையாள் அவன் தன் பெயரைக் கூற மாட்டேனென்றான் என்று கூறினான். பிரபு அவன் யாராயிருப்பானென்று வியப்போடு சிந்தித்துக்கொண்டே வெளியறைக்குச் சென்றதும் அங்கு தன் வரவிற்காகக் காத்துக் கொண்டிருப்பவன் விசுவநாதன் என்று அறிந்து கொண்டார்.

உடனே ஒருவித சந்தோஷத்தோடு அவனை நோக்கி "ஆ! நீ யென்னை வந்து காண்பதாய் வாக்களித்திருந்தாய். ஆனால் நீ கூறிப் பத்து தினங்களாயின." என்றார்.

விஸ்வநாதன் :—"பிரபுவே ! தாங்கள் கூறியதுண்மையே. ஆனால் நான் இவ்வாறு ஆலசியம்செய்ததற்குக் காரணமாய் நேர்ந்த சம்பவங்களைக் கூறக் கேட்டால் என்னை யதற்காகப் பூரணமாக மன்னித்து விடுவீர்களென்று உண்மையாய் நம்புகிறேன்" என்றான்.

பிரபு:—"சரி சரி. நீ கூறக்கூடிய சங்கதிகளைக் கூறு" என்றார்.

விஸ்வ:—"பிரபுவே! தங்களை யன்று சந்தித்தபோது, நான் நோய் அச்சண்டாளனாகிய வேலப்பன் வீட்டிற்குச் சென்று அவனைக் கண்டு அவன் முகத்திற்கு முன்பே யவனுடைய அக்கிரமச் செயல்களைக் கூறித் தூஷித்து விட்டு வந்தால்தான் என் மனம் ஆறுமென்று கூறினே

னல்லவா? அதேப்படி சென்றேன். என்னைக் கண்டதே அவன் முகம் வெளுத்து மிக்க மனக்கலவரமடைந்தான். குற்றமுள்ள அவன் மனமே அவனுக்கு வேதனையை யுண்டாக்கிவிட்டது. அதற்கு முன்பே அவன் நான் பூரண மன்னுப்படைந்த சங்கதியைக் கேள்விப்பட்டிருக்கிருன். ஆகையால் யாரோ செல்வாக்குடைய பிரமுகர்கள் சிநேகம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்று ஊகித்துக் கொண்டான்.

அவன் என்னை யுட்காரும்படி கூறி பேச ஆரம்பிக்கும்போதே அவன் என்னைச் சமாதானம் செய்துகொள்வதோடு மறுபடி தன்னிடம் வேலையிலும் வைத்துக்கொள்ளவும் கருதுகிருன் என்று தெரிந்துகொண்டேன். அதன்மேல் நான் அவனை நோக்கி 'சர்தார் சூரியநாயகம் பிரபுதான் என்மேல் இரக்கமடைந்து எனக்கு இப்பூரண மன்னுப்பு கிடைக்கும்படி செய்தார்' என்று கூறினேன். உண்மையில் அவரே எனக்கு ஆதாரணை செய்தவர்'' என்ருன்.

பிரபு:—''ஆ! ஸர்தார் சூரியநாயகம் பிரபுவா! அவர் நமக்கு மனமொத்த நேசர்'' என்ருர்.

விஸ்வ:—அவரே யென்னை யாதரிப்பவர். இச்சங்கதியை யறிந்தபின் வேலப்பன் எனக்குச் செய்த கெடுதிக்காகத்தான் இன்னும் அதிக மனவருத்த மடைந்தவன்போல் என்னை நோக்கி ''நான் உன்னை மறுபடி என்னிடமே வேலைக்கு வைத்துக்கொண்டால் அப்போது உனக்குச் செய்த கெடுதிக்குப் பூரண பரிகாரம் செய்ததாகும். ஆகையால் நீ யப்படியே சம்மதிப்பாயென்று கோருகிறேன்'' என்ருன். நான் முதலில் ஆக்ஷேபிப்பவன் போல் அபிநயம் செய்து பிறகு ஒப்புக்கொண்டேன். எனக்கு அப்படிச் செய்ய அந்தாங்கத்தில் பிரியமே.

ஏனெனில் அவன்மேல் நான் கருதியபடி பூரண வஞ்சம் தீர்த்துக்கொள்ள அப்போது எனக்குச் சுலபமாய் சௌகரியங்கள் ஏற்படும்.

பிரபு:—"அம்மூடன் உன்னை மறுபடி ஏன் வேலையில் வைத்துக்கொண்டானோ" என்றார்.

விஸ்வ:—மிக்க செல்வாக்குடைய திரவியவந்தர்கள் எனக்கு நட்பாய் ஏற்பட்டுவிட்டார்கள். என் மூலமாய்த் தான் அவர்களைச் சினேகம் செய்துக்கொள்ளலாம். அத்தகையோர் தான் எத்தகைய குற்றம் செய்தவர்களையும் மன்னிக்கும் குணமுடைய மகா உதாரகுணமும் கருணையுமுடையவனென்றும் தன்னைப் புகழ்ந்து கூறுவார்கள். இது மட்டுமல்ல. மிக்க அழகு வாய்ந்த ஒரு தங்கையெனக்கிருப்பது அவனுக்கு முன்னமே தெரியும். அவள் விஷயத்தில் முன்னமே அவன் துர் எண்ணம் கொண்டிருந்தான். இக் காரணங்களால்தான் என்னை மறுபடி வைத்துக்கொள்ள விரும்பினான்.

பிரபு:—ஆனால் அதுமுதல் நீ அவனிடம்தான் இருந்து வருகிறாயோ?

விஸ்வ:—நான் வேலை தேடிக்கொள்வதன் முன் வசிக்க இடம் தேடவேண்டியதாயிற்று. ஆனால் ஸர்தாரின் கருணையால் பரிசுத்தமான அழகிய ஒரு சிறு வீடு கிடைத்தது. என் தங்கையும் நானும் இப்போது சுகமாகவே யிருக்கிறோம். இக்காரணங்களால் இதுவரையில் தங்களை வந்துகாண எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இப்போதுகூட வந்திருக்கமாட்டேன். ஆனால் ஒரு சம்பவம் நேர்ந்தது...

பிரபு:—"என்ன சம்பவம்" என்று ஆவலோடு கேட்டார். ஏனெனில் கர்னல் மாரப்பன், தன் மனைவி, கள்ளப்

பத்திரங்கள் இவைகளோடு சேர்ந்த விஷயங்களில் வேலப்பனும் சம்பந்தப்பட் டிருக்கிறான். அதைப்பற்றிய சில உண்மைகள் இன்னும் பிரபுவுக்குச் சரியாய் விளங்கவில்லை. இனி விஸ்வநாதன் மூலமாய் அவற்றை யறிந்துகொள்ளலாம் என்பது அவர் நம்பிக்கை.

விஸ்வ:—பிரபுவே! நான் தங்களிடத்தில் முதலிலேயே மனம் விட்டு வேலப்பன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் கருதி யிருக்கிறேன் என்று கூறிவிட்டது தங்களுக்கு வியப்பாகவே யிருந்திருக்கும்.

பிரபு:—ஆம், ஆம். எனக்கு வியப்பே. இப்போது அதைப் பற்றிக் கூறுவாயென்று நம்புகிறேன்.

விஸ்வ:—ஆகா, கூறுகிறேன். ஒருவன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்திருப்பவன் கதவண்டை யிருந்து ஒற்றுக் கேட்பது, சந்தில் எட்டிப் பார்ப்பது, மறைந்திருந்து கேட்பது முதலிய பல காரணங்களைச் செய்யவேண்டி யிருக்கிறது.

பிரபு:—ஆம் ஆம்; அப்படியானால் இவைகளையெல்லாம் நீ செய்திருக்கிறாய். ஏதாவது சங்கதிகளைக் கண்டு பிடித்திருப்பாய்.

விஸ்வ:—“ஆம்; கண்டு பிடித்திருக்கிறேன்” என்று அவர் முகத்தை யுற்று நோக்கினான்.

பிரபு அக்குறிப்பை யறிந்துகொண்டு “ஆ! நீ என் சம்பந்தமாய் ஏதோ முக்கியமான விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கிறாய். உன் முகக்குறியால் அச்சங்கதி மனத்துயரை யுண்டாக்கத் தக்க சங்கதியென்று கருதவேண்டியதா யிருக்கிறது” என்றார்.

விசுவநாதன் துயரத்தோடு மெதுவாய் "பிரபுவே! விசனத்தை யுண்டாக்கத்தக்கது மட்டுமல்ல. அதனினுங் கொடியது. பெரிய மனோவியாதியை யுண்டாக்கத்தக்கது. நெஞ்சு திடுக்கிட்டு வயிற்றெரிச்சலை யுண்டாக்கத்தக்கது. அதைக் கூறவே என் மனம் நடுங்குகிறது" என்றான்.

பிரபு:—"ஆ! அப்படிப்பட்டதாயின் அதென்ன வென்பதைக் கூறு" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

விஸ்வ:—பிரபுவே அதைப்பற்றி முன்னுடி தங்கள் மனதில் சந்தேகம் உண்டாயிருந்தாலும் இப்போது அதைக் கேட்டால் அவ்வளவாய் மனத்திகில் உண்டாகாது.

பிரபு:—"நீ கூறு கூறு. என் மனக்கலக்கம் அப்போதுதான் அடங்கும்; நீ யொன்றுக்கும் அச்சப்பட வேண்டாம். பயப்படாமல் கூறு" என்றார்.

விஸ்வ:—பிரபுவே! இன்று காலை நான் கண்டுபிடித்த விஷயம் சீமாட்டியைப் பற்றியது.

பிரபு:—"ஆகா! தெரியும். எனக்கு முன்னமே யிவ்விதச் சந்தேகம் உண்டென்று இப்போது தெரிகிறதா. இனித் தைரியமாய்க் கூறு" என்றார்.

விஸ்வநாதன் அந்த அறையில் வேறு யாராவது ஒளிந்து கொண்டிருக்கிறார்களா வென்று பார்ப்பவன்போல் நாற்புறங்களிலும் பார்த்துவிட்டுப் பிறகு பிரபுவை நோக்கி, "பிரபுவே! இன்று தற்செயலாய் நான் வேலப்பனுடைய செக் புத்தகத்தைப் பார்த்தபோது அதில் சீமாட்டிக்கு அளிக்கப் பட்டதாய்ப் பெருந் தொகைகள் குறிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். தாங்கள் அவனிடம் இலேவாதேவி செய்வதுண்டென்று நான் அறிவேனெனினும் இந்த விஷயம் எனக்கு மிக்க வியப்பா யிருந்தது" என்றான்.

பிரபு:—"ஆ! உண்மையே. சமீபத்தில் அடிக்கடி பணத் தொகைகள் அவளால் கையாடப்பட்டதைக் கண்டேன். ஆனால் தன் சகோதரிகளிடம் கடன் வாங்கிய தாய்க் கூறினாள். கூறு கூறு. அப்புறம்" என்றார்.

விஸ்வ:—"இது ஏதோ அதிசயமா யிருக்கிறதென்று என்னிட மிருந்த ஒரு கள்ளச் சாவியால் வேலப்பன் கைப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். அதில் சீமாட்டி அவனுக்கெழுதிய கடிதம் ஒன்று அகப்பட்டது. பிரபுவே! அதை வாசித்துப் பார்த்ததே எனக்கு அந்த விபரீதமான உண்மை தெரிந்துவிட்டது. பிரபு இன்னும் அதைப்பற்றி தெளிவாய் என் வாயாற் கூறமாட்டேன். தாங்களே ஊகித்துக்கொள்ள வேண்டுகிறேன்" என்றான்.

இதைக் கேட்டதே பிரபுவுக்குண்டான மனோவேதனை யித்தகையதென யாராலும் கூறமுடியாது. தன் மனைவி கற்பிழந்தாள் என்பதைக் கேட்கும் உயர்குடிப் பிறந்த ஒருவன் மனம் எவ்வாறுதா னிருக்கும். அவர் ஆத்திரத்தோடும், படபடப்போடும், "ஓகோ தெரிந்துகொண்டேன். இச்சண்டாளி என் மானத்தை யழித்துவிட்டாள். அதிலும் இத்தகைய உலோபியாகிய இழிகுலச் சண்டாளனுக்காக... அய்யோ கடவுளே. எதோ அக்கடிதம்? அதைக் கொண்டு வந்தாயா?" என்றார்.

விஸ்வ:—பிரபுவே! தாங்கள் சற்று பொறுமையாய் இருக்க வேண்டும். அப்போதுதான் அச்சண்டாளன் மேல் நமது வஞ்சத்தைப் பூரணமாய்த் தீர்த்துக் கொள்ளலாகும். நான் அக்கடிதத்தை யெடுத்துக்கொண்டு வந்துவிடவில்லை. ஏனெனில் அவன் கைப்பெட்டியிலிருப்பதை நான் எடுத்து வந்துவிட்டால், எப்படி

யாவது அவனுக்கு என்மேல் சந்தேகம் உண்டாகும். பிறகு நமது காரியம் கெட்டுப்போகும். ஆனால் நான் அக்கடிதத்தை நன்ருய் வாசித்துப் பார்த்ததில் சங்கதி உண்மையென்று சற்றும் சந்தேகமின்றி விளங்கிவிட்டது. எப்படியெனில் வேலப்பனும் சீமாட்டியும் கௌரி என்ற ஒரு மூதாட்டியின் வீட்டில் இரவில் இரண்டு மூன்று நாட்கள் சந்தித்து அங்கு தங்கியிருந்ததாக அக்கடிதத்தால் நன்ருய் விளங்குகிறது.

பிரபு:—ஆ! அவள் வீடுதானு? தெரிகிறது, தெரிகிறது. இனி நீ கூறுவதனைத்தும் உண்மையேயென்று தெரிகிறது.

விஸ்வ:—"யாவும் உண்மையே. என்வரையில் எள்ளளவு சந்தேகமேனு மிருந்தால் ஒருபோதும் புருடன் மனைவியர்க்குள் மிக்க மனக்கொதிப்பை யுண்டாக்கும் இவ் விஷயத்தைப் பிரஸ்தாபிக்கவே மாட்டேன். இப்போது நான் இவ்வளவு துரிதமாய் வந்தது ஒரு கடிதத்தினுல். இன்று காலே பத்துமணிக்கு வேலப்பன் ஐந்தாறு கடிதங்கள் எழுதித் தபாலுக்கு அனுப்பினுன். நான் வேணுமென்றே அவற்றைப் பார்த்தேன். அவைகளில் ஒன்று நமது சீமாட்டிக்கு எழுதப்பட்டிருக்கிறது." என்றுன்.

பிரபு:—ஆ! அப்படியானுல் அவள் துரோக நடக்கையைப் பற்றி தக்க ருசு என் கையிலேயே சிக்கலாகும். அக்கடிதம் தபாலில் போடப்பட்டு இன்னும் ஒரு மணி நேரம்கூட ஆகவில்லே." என்ருர்.

விஸ்வ:—"ஆம் பிரபுவே அது தபால்மூலமாய் மாளிகை வந்துசேர இன்னம் இரண்டுமணி நேரமாகும். தாங்கள் அதை யிடையில் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்ய

லாகாதா? அப்படியாயின் தாங்கள் அதைச் சுலப மாய்ப் பிரித்துப் பார்த்துக்கொண்டு அச்சங்கதி தெரி யாத வண்ணமே பிறகு அதைச் சீமாட்டியிடம் அவ சியமாயினும் அனுப்பலாம். வேலப்பன் அக்கடிதத்தின் மேல் போட்டிருக்கும் மொஹரும் அதேநிறமுடைய அரக்கும் யாவும் இதோ நான் கொண்டு வந்திருக்கி றேன்'' என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட பிரபு "ஓ விஸ்வநாதம்! நீ செய்யும் உதவிக்கு நான் எவ்விதமாய் உனக்குக் கைம்மாறு செய்வதென்று எனக்கு விளங்கவில்லையே..." என்றதே,

விஸ்வ:—"பிரபுவே! தாங்கள் எனக்குப் பொருள் கொடுக்க வேண்டாம். நான் ஒன்றையும் பிரதிபலனாகத் தங்க ளிடம் எதிர்பார்க்கவில்லை. அத்துஷ்டன்மேல் பூரண மாய் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஆகையால் தங்களுக்கு இத்தகைய அவமானமான துரோகத்தைச்செய்த அச்சண்டாளன்மேல் தாங்கள் எள்ளளவு இரக்கமும் காட்டலாகாது. அவன்மேல் மான நஷ்டத்திற்காக தாவாசெய்து அவன் சாமான் கள் முதலிய யாவற்றையும் ஜப்திசெய்து அவனை யவ மானப்படுத்தி யடியோடழிக்கப் பின்னிடையலாகாது. இதுவே நான் பிரதிபலனாகக் கோருவது'' என்றான்.

பிரபு அவன் மொழிகளைக்கேட்டதே, அவருக்கும் வேலப்பன்மேல் மிக்க துவேஷமும் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவலும் உண்டாய்விட்டது. அவர் அவனை நோக்கி,

"விசுவநாதா! நீ கூறுகிறபடியே இவ்விஷயத்தில் நாமிருவரும் மனமொத்த நேசர்கள்போல் கைகோத்துக்

கொண்டு நம் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வோம். உன் நிபந்தனைப்படி நடக்க நான் மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்கிறேன். நீ செய்யும் இப்பேருதவியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன் என்பது சத்தியம். ஒருசமயம் நீ அவன் பெட்டியிற்கண்ட அக்கடிதம் நமது ருசுவிற்கு வேண்டியதாயின்...?'' என்றதே,

விசுவநாதன் ''பிரபுவே! அப்படியாயின் அதைக் கட்டாயம் கொண்டுவந்து விடுகிறேன். அதற்கஞ்சவேண்டாம். அதுமட்டுமல்ல. தங்களுக்கு இன்னும் எதுவேண்டுமாயினும் சரி, அதைக் கொண்டுவந்து கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன். தாங்கள் மட்டும் முடிவுவரையில் அவன்மேல் எள்ளளவு இரக்கம்கூடக் காட்டக்கூடாது. அது ஒன்றே தாங்கள் செய்யவேண்டியது'' என்றான்.

பிரபு:—ஆ! நீ இனி என் நண்பனே. நாம் உண்மையாகவே கைகோத்துக் கொள்வோம். எப்படியும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்து விட்டோம். ஆகையால் பூரணவஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டும். நமது வஞ்சம் பூரணமா யிருக்கவேண்டும்.

விஸ்வ:—பிரபுவே நாம் மனதார ஒப்பந்தம் செய்துகொண்டோம். ஆகையால் தங்கள் ஒப்பந்தப்படி தாங்கள் அச்சண்டாளனுக்கு எள்ளளவு இரக்கம்கூடக் காட்டலாகாது. அத்துஷ்டன் என் தங்கையைக் கற்பழிக்கப் பார்த்தான். எனக்குத் தீரா அவமானத்தை யுண்டாக்கப் பார்த்தான்.

பிரபு:—ஆ! உனக்கும் இத்தகைய அவமானம் இன்னதென்று தெரிந்திருக்கிறது. இப்போது எனக்கு அவமான முண்டாக்கியவர்களில் என் மனைவியும் ஒருத்தி.

அவள் ஆதிமுதல் கபடவஞ்சனேயோடு நடந்து வருகிருள். அவளே யகத்தியம் தண்டிக்கவேண்டும். வேலப்பன் மற்ருெரு ஆள். நண்பனே இன்னெருவன் இருக்கிருன்.

விஸ்வ:—இன்னெருவனு? யார் பிரபுவே?

பிரபு:—நீ பார்த்த கடிதங்களில் கர்னல் மாரப்பன் என்ற பெயரைக் கண்டிருக்கிருயா? சிந்தித்துப்பார்.

விஸ்வ:—"ஆ! இப்போது நினைப்பிற்கு வந்தது. சீமாட்டி வேலப்பனுக் கெழுதியிருக்கும் கடிதத்தில் தான் கர்னல் மாரப்பனிடம் சில உண்டிகள் கொடுத்ததாகவும் அவைகளே வேலப்பன் அனுப்பிய ஆள்மூலமாய் மறுபடி பெற்றுக்கொண்டதாகவும் கூறப்பட்டிருந்தது." என்ருன்.

பிரபு:—"ஆ! இந்த மர்மங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளி வந்துகொண்டேயிருக்கின்றன. அந்தக் கள்ளப்பயல் மாரப்பனே நான் சந்தித்து இதைப்பற்றிக் கேட்டபோது அடடா அவன் எவ்வளவு தந்திரமான கதை கட்டிவிட்டான்! முதலில் அதைக்கேட்டதே பிரமித்து ஏமாந்துவிட விருந்தேன். அவனும் என் மனேவியைப்போலவே பெரிய இந்திரஜால அபிநயக்காரன். கைதேர்ந்த கள்ளப்பயல். நீ சமயம்பார்த்து அக்கடிதத்தைக் கொண்டுவந்துவிட வேண்டும். அப்போதுதான் இதில் சம்பந்தப்பட்ட மூவர் மேலும் நாம் பூரணவஞ்சம் தீர்த்துக்கொள்ளலாகும்" என்ருர்.

விஸ்வ:—"பிரபுவே! என்னுல் கூடிய முயற்சிகள் யாவும் செய்து தங்களுக்கு வேண்டிய அத்தாட்சிகளனைத்தும் கொண்டுவந்து விடுகிறேன். அதிற் ருங்கள்

எள்ளளவும் சந்தேகம் கொள்ளவேண்டாம்'' என்ருன்.

அதன் பிறகு விஸ்வநாதன் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிரபுவினிடம் விடைபெற்றுக்கொண்டு சென்ருன்.

---

95 - வது அத்தியாயம்

குமாரவேல் பிரபுவோடு சச்சரவு செய்துகொண்டிருந்த அவர் மனைவியாகிய ஏகநாயகிச் சீமாட்டி அவர் சென்றபின் நெடுநேரம் தனியே யுட்கார்ந்து சிந்தனையிலிருந்தாள். அச்சமயம் அவளுடைய மிக்க சாமர்த்தியமும் தந்திரமும் யுக்தியும் வாய்ந்த அந்தரங்கத்தோழியாகிய ஜெகதாள் அங்கு வந்து தன் எஜமானியை நோக்கி "அம்மா தாங்கள் உடைகளைப்பற்றி ஏதேனும் கட்டளை யிடுகிறீர்களோவென்று கேட்க வந்தேன்'' என்ருள்.

ஏகநாயகி:—"இல்லை யில்லை. இப்போதில்லை. எனக்கும் பிரபுவுக்கும் சற்று முன்னே மும்மரமான சச்சரவு நடந்தது. அவருடைய பழைய சந்தேகங்களனைத்தும் மறுபடி முளைத்துக்கொண்டன. இன்னும் புது சந்தேகங்களும் உண்டாயிருக்கின்றன. அவர் தன் கலியாண ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளப் போவதாகவும், என் விஷயங்களைப் பகிரங்கப்படுத்தி விடுவதாகவும், என் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்வதாகவும், இன்னும் என்னென்னவோ கூறினர். இந்த வீராப்புப் பேச்சுகளுக்கெல்லாம் நான் அஞ்சுகிறவளல்லவென்று உனக்குத் தெரிந்தே யிருக்கிறது. தன்னிடம் பூரணமான அத்தாட்சிகள் கிடைக்கும்வரையில் அவர் ஒன்றும் செய்ய

முயலமாட்டாரென்று நான் நிச்சயமாயறிவேன். அந்த அத்தாட்சிகளோ அவர் கைக்கு ஒருபோதும் எட்டப் போகிறதில்லை" என்று புன்னகை புரிந்துகொண்டே மொழிந்தாள்.

ஜெகதாள்:—"ஆ! சீமாட்டியே, அவருக்குப் புது சந்தேகங் களுமுண்டா யிருக்கின்றதாகவா கூறுகிறீர்? ஆனால் இப்போது புதிதாய் நடக்க ஏற்பா......" என்பதற்குள்,

சீமாட்டி:—"ஆ! புதிதாய் நான் ஒரு காதலனோடுகூட செய்து கொண்டிருக்கும் ஏற்பாடு என்றுதானே கேட்கிறாய்? ஆம், உண்மையே; ஆனால் இன்னும் ஒன்றும் நேரிட்டுவிடவில்லை. ஆயினும் எவ்வளவுசிக்கிரமாய் நேரிடக்கூடுமோ அதைக் கூறமுடியாது. அந்த ஆசாமி செல்லப்பப் பிரபுவே. அவர் பூரண வனப்புடையவரல்லவா? என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டாள்.

ஜக:—"ஆம், ஆம்; நான் அவரைப் பலதரம் பார்த்திருக்கிறேன். ஆனால் எஜமானியே பிரபுவுக்குச் சந்தேகம் உண்டாகாமல் நடந்து கொள்வது நலம்" என்றாள்.

சீமா:—"அதைப்பற்றிப் பயமில்லை. நான் ஜாக்கிரதையாகவே நடந்துகொண்டு வருவேன். இன்று காலை பிரபுவுக்குப் புது சந்தேகங்களுண்டானதுதான் எனக்குச் சற்று கலவரமாயிருக்கிறது. செல்லப்பப் பிரபுவை கடிதம் எழுதும்படி கூறினேன். இன்று அவர் கடிதம் சுமார் ஒருமணி தபாலுக்கு வரக்கூடும். ஒரு சமயம் அது பிரபுவிடம் சிக்கிக்கொண்டால்..." என்றதே,

ஜக:—அதற்காக அஞ்சுவதாயின் தாங்கள் பயப்படவேண்டாம்; நான் முன்னடி சென்று தபால்காரனுக்காகக்

காத்துக்கொண்டிருந்து அதை வாங்கி வந்து விடுகிறேன்.

சீமா:—"அப்படியே செய். அதுவே சந்தேகம் உண்டாகாதிருக்க நிச்சயமான வழி" என்றாள்.

அதன் பிறகு அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையைப் பற்றி நாம் கவனிக்கவேண்டுவதில்லை. சுமார் இரண்டு மணி நேரங் கழித்து ஜெகதாள் மாளிகையைவிட்டு வெளிப்பட்டு வீதியில்சென்று நின்றதும் சற்றுநேரங் கழித்து வீதியின் கோடியில் தபால்காரன் வருவதைக்கண்டு அவனை நோக்கிச் சென்றாள். ஆனால் அச்சமயம் தன் எஜமானாகிய பிரபு எந்த வழியாகவோ மாளிகையிலிருந்து வெளிப்பட்டு அதே தபால்காரனை நோக்கித் தனக்குமுன் சென்றுகொண்டிருப்பதைக் கண்டதே அவள் மனதிலுண்டான திகிலும் குழப்பமும் இன்னவிதமென்று சொல்லமுடியாது. பிரபு தன்னைக் காணவில்லையென்றே அவள் எண்ணிக்கொண்டாள். பிரபு பார்க்கவில்லையோ, பார்த்தும் பாராதவர்போ லிருந்துவிட்டாரோ என்ற நிச்சயம் அவளுக்குத் தெரியாது. ஆயினும் அவள் உடனே மறைந்துகொண்டு பிரபுவின் நடக்கைகளைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள்.

பிரபு நேராய்த் தபாற்கார னருகிற் சென்றதும் அவன் நின்று வந்தனமளித்ததையும், பிரபு என்னமோ கூறியதையும், தபாற்காரன் அவரிடம் சில கடிதங்கள் கொடுத்ததையும், பிறகு பிரபு நேராய் மாளிகைக்குள் சென்றதையும் கண்டாள். அப்போதே அவள் மனதில் பெருங்குழப்ப முண்டாய்விட்டது. பிரபு மாளிகைக்குள் சென்றதும் ஜெகதாள் தபாற்காரனிடம் ஓடி "சீமாட்டிக்குக் கடிதங்கள் வந்ததோ?" வென்றாள்.

தபாற்காரன்:—"அம்மா! பல கடிதங்கள் பிரபுவின் மாளிகைக்கு வந்தன. யாவற்றையும் பிரபுவிடமே கொடுத்துவிட்டேன்" என்றான்.

ஜக:—"சரிதான். ஏகநாயகிச் சீமாட்டிக்கு அவற்றில் ஏதாவது கடிதங்களிருந்தனவோ? சற்று கவனமாய்ச் சிந்தித்துக் கூறு" என்று வினயமாய்க்கேட்டாள்.

தபால்காரன் சற்று சிந்தித்து "ஆம். சீமாட்டிக்கு அவற்றில் இரண்டு கடிதங்களிருந்தன" என்றான்.

ஜகதாள் மிக்க வியாகூலத்தோடும் திகிலோடும் மறைவாய் மாளிகைக்குள் நுழைந்து தன் எஜமாட்டியாகிய ஏகநாயகிச் சீமாட்டியிடம் நடந்த சங்கதிகளைக் கூறினாள். இவற்றைக் கேட்டதே சீமாட்டிக்கு மிக்க திகிலுண்டாயிற்று. தான் வெடிமருந்துப் பிப்பாய்களின்மேல் நின்றுகொண்டிருப்பதுபோலும் அது எந்தவிநாடி வெடிக்குமோவென்றும் உளம் நடக்க மெடுத்துக்கொண்டது. அதன்மேல் எஜமானியும் அவள் அந்தரங்கத் தோழியும் சுமார் கால்மணிநேரம் இத்திகிலான சம்பவத்தைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். கால்மணிநேரம் மிக்க குறைந்த காலமாயிருந்தாலும் அது ஒரு யுகம்போல் அவர்களிருவருக்கும் தோன்றியது.

அக் கால்மணிநேரம் கழிந்ததும் பிரபுவின் வேலைக்காரன் ஒருவன் சீமாட்டியினிடம் சென்று தபாலில் வந்த இரண்டு கடிதங்களை யவளிடமளித்தான். அவன் வெளியிற் சென்று கதவு மூடப்பட்டதும் ஜெகதாள் "ஆ! இரண்டு கடிதங்கள்—சந்தேகமின்றி இரண்டும் பிரபுவால் திறந்து பார்க்கப்பட்டிருக்கும்" என்றாள்.

சீமா:—"இல்லே, யில்லே; இதோ பார் இது வேலப்பனிட மிருந்து வந்திருக்கிறது. அரக்கு முத்திரை அவன் முத் திரையே. இது எனக்கு நன்ருய்த் தெரியும்" என்ருள்.

ஆனல் மறுவிநாடியே அவள் முகத்தில் ஒரு மாறுத லுண்டாயிற்று. மற்றெரு கடிதத்தைப் பார்த்து "ஆ! இது செல்லப்பப் பிரபுவிடமிருந்து வருகிறது. இது காதற்கடித மென்று அறிவேன். இதோ இது திறக்கப்பட்டிருக்கிறது. அரக்கு முதலில் அனல் காட்டி எடுக்கப்பட்ட இடம் இதோ தெரிகிறது பார். ஆம் இது உண்மையேயென்று கூறு வேன்" என்ருள்.

ஜெகதாள்:—"அப்படியானல் இரண்டுமே பிரிக்கப்பட்டிருக் கும்" என்ருள்.

சீமாட்டி:—"இருக்கக்கூடும். ஆனல் வேலப்பன் கடிதத்தின் மேல் இருக்கும் அரக்கு முத்திரையில் அதிக அரக்கு போடப்பட்டிருப்பதாய் மட்டும் தெரிந்தது. இந்த நாட்டுப்புறவாசிகள் அப்படி அநாகரிகமாய்ச் செய்வ துண்டு. இருக்கட்டும். பிரபு இரண்டு கடிதங்களேயும் பிரித்துப் பார்த்து மறுபடி என்னிடமே யனுப்பி யிருந்தால் நான் எமாந்து இருக்கும்போது சரியான ருசுவோடு பிடித்துக் கொள்ளலாமென்று எண்ணித் தானே அப்படிச் செய்திருக்கவேண்டும். இருக்கட்டும் பார்ப்போம். முன்னே வேலப்பன் கடிதத்தைப் படித் துப் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே அதைப் பிரித்தாள். அதில் கீழ்க்கண்டபடி யெழுதியிருந்தது:—

"என் பிரியமுள்ள ஏகநாயகிக்கு எழுதிக்கொண்டது, அந்தக் கள்ளப்பயலாகிய கர்னல் மாரப்பன் எனக்கு எழுதி யிருக்கும் கடிதத்தால் நான் உன்னேக் காணவேண்டியது

அவசியமாயிருக்கிறது. அத்திருட்டுப்பயல் சிறையிலிருந்து தப்பித்துக்கொள்ள என்னென்னமோ தந்திரங்களெல்லாம் செய்து பார்த்தும் ஒன்றும் அனுகூலப்படவில்லை. ஆகையால் இப்போது ஒரு தந்திரமான யோசனைசெய்து அதை யெனக்குத் தெரிவித்திருக்கிறான். அது மிக்க பயங்கரமானதாயிருக்கிறது. ஆகையால் உன்னால் கூடிய துரிதத்தில் நாம் இருவரும் சந்திக்கும்படியான ஏற்பாடுசெய். நான் உன்னைக் காணவேண்டுமென்பது இந்த விஷயத்திற்கு மட்டுமல்ல, என் அன்பிற்குரிய காதலியே. உன்னை ஒரு முறையாவது மறுபடி யாலிங்கனம் செய்துகொள்ளும் பேரானந்தத்தை யடையலாமென்ற ஆவலேயன்றிவேறில்லை. உன் விடையை மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். என் கண்மணியே! ஆலசியம் செய்யாதே. நான் உயிர்வாழ்வது உன்பொருட்டென்றே நம்பு. ஆ! பிரபுவுக்கும் உனக்கும் உள்ள நேசம் இப்போதெப்படி யிருக்கிறது? அவருடைய சந்தேகங்களெல்லாம் ஒழிந்தனவா? ஒழிந்திருக்குமென்றே நம்புகிறேன். ஆயினும் நாம் மறுபடி சந்திக்கும்போது இதைப்பற்றி நீ மறவாமல் எனக்குக்கூறினால் தான் என்மனம் நிம்மதியாயிருக்கும். மறவாமல் நாம் கூடிய சீக்கிரம் கௌ......(கௌரி) வீட்டிலாவது, உல...சிமாட்டி (உலகநாயகி)யின் மாளிகையிலாவது சந்திக்கும்படி ஏற்பாடு செய்யக் கோருகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்பை மறவாத
"வேலப்பன்"

இதை வாசித்ததும் ஏகநாயகிச்சிமாட்டி மிக்க திகிலடைந்து "அய்யோ கடவுளே இத்தகைய கடிதத்தைப் பிரபு பிரித்துப் பார்த்திருந்தால்...முழுதும் படித்துப் பார்த்திருந்

தால்...'' என்றாள். ஜகதாள் ''ஆகா வாசித்தே இருப்பார். அவர் வாசித்தார் என்றே நாம் கருதிக்கொள்ளவேண்டும். ஆனால் இது தங்களுக்கும் வேலப்பனுக்கும் சினேகமுண்டென்பதற்கு ஒரு ருசுவா யுபயோகமாக, நற்காலமாய் இச்சமயம் இது பிரபுவின் வசத்திலில்லை. தங்கள் வசத்தில் தானிருக்கிறது'' என்றாள்.

சீமாட்டி ''ஆம், நீ கூறுவது உண்மையே. ஆகையால் இந்த ருசு இப்படி யொழியட்டும். இனி செல்லப்பப்பிரபுவின் கடிதத்தைப் பிரித்துப் பார்ப்போம்'' என்று கூறிக்கொண்டே அதைப்பிரித்தாள். அதில் கீழ்க்கண்டபடி வரைந்திருந்தது:—

''என் அன்பிற்குரிய ஏகநாயகிக்கு, கடந்த இரவு உன் நட்பினால் நான் அனுபவித்த பேரானந்தத்தை யின்னவிதமென்று கூற எந்தப் பாஷைகளிலும் தக்க வார்த்தைகளே கிடையா. உன் முகதரிசனமே பரமானந்தப் பிராப்தி. என் வரையில் உன்போன்ற அழகுள்ள மாது உலகில் வேறொருத்தியிருப்பாளென்று கருதவே மாட்டேன். என்மனைவி அழகுடையவளே, மிக்க கம்பீரமான அழகுடையவளென்றே யாவரும் கூறுகிறார்கள். ஆயினும் உன் அழகோ அதற்குப் பத்தாயிரம்மடங்கு அதிக உயர்வானது. தெய்வீகம் பொருந்திய தேவமாதின் அழகிற்கு என் மனைவியினழகு சற்றும் இணையாகாது. கடந்த இரவு என் சிறியதாயார் பத்மாவதியம்மாள் வீட்டில் முதல்தடவையாக நான் உன்னிடம் என் காதலை வெளியிட்டபோது உனக்கும் என்மேல் காதலிருப்பதாய் நீ சொன்ன சமயமுண்டே அதுவே நான் முதல் முதல் பேரானந்தத்தை யனுபவித்த காலம். பிறகு விருந்து நடந்தபோது நான் உன் பக்கத்திலேயே யுட்கார்ந்தேன். உன் புருடன் எதையும் கவனிக்கவில்லை. ஆகையால் அவருக்கு

ஒரு சந்தேகமு முண்டாயிராது. என்மனைவிக்கோ பொரு மையே கிடையாது. நீ உனக்குக் கடிதமெழுதும்படி எனக்கு அனுமதி யளித்தாய். நான் மிக்க ஆனந்தத்தோடு அதன்படி யிக்கடிதம் எழுதுகிறேன். மேலும் இன்றிரவு நாமிருவரும் மறுபடி சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று நல்லதிர்ஷ்டமாய் வாய்ந்திருக்கிறது. அதாவது வரதநாயகிச் சீமாட்டி முகமூடி விருந்தளிப்பதாக அழைப்புச்சீட்டு அனுப்பி யிருப்பதை மறந்திருக்கமாட்டாயென்று நம்பு கிறேன். அத்தினம் இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிடு மென்று நான் நினைத்திருக்கவில்லை. கண்மணியே இந்த அனுகூலமான சந்தர்ப்பத்தை நாம் வீணாக்காமல் இருவரும் சந்திக்கும் வண்ணம் தயைபுரியும்படி யுன்னை வேண்டிக் கொள்கிறேன். நீ கட்டாயம் என் பிரியப்படி நடந்து கொள்வாய் என்று நான் பூரணமாய் நம்புகிறேன். ஆகை யால் அந்த ஏற்பாட்டின்படிக்கு நான் இரவு சரியாய் ஒன் பதுமணிக்கு வரதநாயகிச் சீமாட்டியின் மாளிகைக்கு வரு வேன். நான் முற்காலத்து குதிரைவீரர் படையின் ஓர் உத்தியோகஸ்தன்போல் மாறுவேட மணிந்துகொண்டு சிவப் புக்கோடுகள் போட்ட மஞ்சள் பட்டினாலாகிய முகமூடி யணிந்திருப்பேன். நீலவர்ண மேல் அங்கியும் சுத்த வெண் பட்டுக் கைக்குட்டையும் அணிந்திருப்பேன். இதுவே என் அடையாளம். நீ யின்னவிதமான மாறுவேட மணிந்து வருவாயென்பதும் உன் மற்ற அடையாளங்களும் எனக் குத் தெரியாதாகையால் நீயே யென்னைக் 'கண்டறிந்து கொண்டு என்னிடம் முதலில் பேசவேண்டும். நீதான் என்று நான் அறிந்துகொள்ள வேண்டிய தெப்படியெனின் "ஓ போர்வீரரே! ஏது உமது வாட்படையை மறந்து வந்து விட்டதுபோற் காண்கிறது?" என்று கேள். அக்குறிப்பால் நீதான் பேசுவதென்று நான் தெரிந்துகொண்டு பதிலுக்கு

"ஏனெனில் நான் நாணயமான ஒரு மரியாதைக்குரிய மாது ஸ்திரீயைக்காண எதிர்பார்த்துக்கொண் டிருப்பதால் அப் படி நேரிட்டது" என்று கூறுவேன். இதனால் சற்றும் சந்தேகமென்பதே யில்லாமல் நீ சந்தித்தது என்னையே யென்று நிச்சயமா யறிந்து கொள்ளலாம். நாம் இரவு அவசியம் சந்திப்போமாக.

இப்படிக்கு,
உன் அன்பையே
உயிராய்க்கொண்டிருக்கும்
"செல்லப்பன்"

இக்கடிதத்தை வாசித்துப் பார்த்ததும் ஏகநாயகிச்சீமாட்டி தன் தோழியை நோக்கி "ஆ! மிக்க அபூர்வமும் முதற்றரமு மான காதற்கடிதம். ஆனால் இத்தகைய கடிதம் தன் மனை விக்கு ஒரு அன்னியனால் எழுதப்பட்டதென்று அவள் புரு டன் பார்ப்பதற்கு மிக்க நேர்த்தியாயிருக்கும். இருக்கட் டும், ஜெகதா! பிரபு என்னைத் தந்திரமான வலையிற் பிடிக்க யோசிப்பானென்று கருதுகிறாயா? நாம் இந்த இக்கட்டி லிருந்து தப்ப என்ன ஏற்பாடு செய்யலாம்?" என்றாள்.

ஜகதாள்:—"சீமாட்டியே, பிரபு சும்மா விருக்கமாட்டார். கள்ளக் கையொப்பமிட்டு நீ யெழுதுவதுபோல் ஒரு கடிதமெழுதி செல்லப்பப்பிரபு அந்த விருந்திற்கு வாராத படிச் செய்துவிட்டு தான் அவரைப்போல் வேட மணிந்துவந்து உன்னிடம் சம்பாஷித்து உன்னை யவ மானப்படுத்துவார் என்றே நான் நம்புகிறேன்." என்றாள்.

சீமாட்டி:—"ஆம், ஆம். நீ கூறுவது உண்மையே. ஆ! கள்ளக் கையொப்பம் போட்டா எழுதுவார். சரி, சரி.

என்மனதில் ஒரு யோசனை யுதிக்கிறது. அதுதான் சரி. அதே தந்திரத்தால் அவரையே நமது வலையிற் சிக்கச்செய்து விடலாம். அவருக்கு வேண்டிய ஒரு ஆசாமிக்கு அவர் எழுதியதுபோலவே யொரு கடிதம் எழுதி அவரையே வலையிற் சிக்கிக்கொள்ளச் செய்கிறேன். கடிதம் மசி முதலிய கொண்டுவா." என்றாள்.

அவ்வாறே எழுது கருவிகள் யாவும் கொண்டுவரப் பட்டதே சீமாட்டி முதலில் ஒரு கடிதம் எழுதி அதை ஒரு உறையில்போட்டு அரக்கு முத்திரை வைத்துவிட்டுப் பிறகு செல்லப்பப் பிரபுவுக்குக் கீழ்க்கண்டபடி ஒரு கடிதம் எழுதினாள்:—

"என் பிரியத்திற்குரிய செல்லப்பப்பிரபுவுக்கு தங்கள் கடிதத்திற்காக மிக்க வந்தனம். நான் அவசியம் வரத நாயகிச் சீமாட்டியின் விருந்திற்கு வருகிறேன். ஆனால் எக் காரணத்திற்காகவும் தாங்கள் குறித்தபடி உடையணிந்து வரவேண்டாம். வேறு எதாவது முற்றும் மாறான சாதாரண உடை யணிந்துகொண்டு வாரும். விசேஷ சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. நான் என்தோழி ஜகதாளோடு வருகிறேன். வரதநாயகிச் சீமாட்டியின் படுக்கை யறைக்கு நேரில் சற்று தூரத்திலுள்ள சிறு கொட்டகையில் இரவு சரியாய் எட்டரைமணிக்கு நான் வந்திருப்பேன். என் உடையாலும் என்கூட ஜகதாள் வருவதாலுமே என்னை நீர் சுலபமா யறிந்து கொள்ளலாகும். மற்ற விஷயங்கள் அங்கு பேசிக்கொள்ளலாம்" என்றெழுதி கடைசியில் தான் அணிந்துவரும் உடைகள் இன்னின்னவையென்று தெளிவாய் எழுதினாள்.

இரண்டு கடிதங்களும் தபாலுக்கு அனுப்பப்பட்டன.

* * * * *

விருந்தினன்று வரதநாயகிச் சீமாட்டியின் மாளிகை யலங்கரிக்கப்பட்டிருந்த அபூர்வமான விதத்தையும் எண்ணிறந்த பிரபுக்களும் சீமாட்டிகளும் விதவிதமான உடைகளோடு மாறுவேடமணிந்து வந்திருந்த வைபவத்தையும் மற்ற ஆர்ப்பாட்டங்களையும் நாம் விவரித்து வரைவதாயின் மிகப் பெருகுமென்றஞ்சி விடுகின்றோம். அதோடு அங்கு நடந்த கோரமான காதற் காட்சிகளை விவரமாய்க் கூறுவது அனுவசியமாகும். ஸ்திரீகளைப் பரபுருடர்களிடம் தாராளமாய்ப் பேசும்படிக்கும், அவர்களைக் கட்டில் வைத்திருப்பது நாகரீகமும் கௌரவமு மல்லவென்று மூடமதியாற் கருதி அவர்கள் சுயேச்சையாய் ஆடவரைப்போல் நினைத்த வேளையில் நினைத்தயிடம் செல்லும்படிக்கும் விட்டுவிடுவதால் நேரிடக்கூடிய விபரீதக் கெடுதிகளையும், அத்தகைய பழக்கத்தால் புத்திபிசகி யன்னியன்மேல் காதல்கொண்டு கடவுள் சந்நிதியில் சத்தியவாக்களித்து மணம்புரிந்த கணவனை வஞ்சித்துத் துரோகம் செய்யக் கருதும் மாதர்கள் எத்தகைய தந்திரமும் சூதுமாகிய விஷயங்களையெல்லாம் செய்யத் துணிவார்கள் என்பதையும் விளக்கிக் காட்டுவதற்கு அவசியமான விஷயங்கள் மட்டுமே கூறிக் கதையைத்தொடர்வோம்.

விருந்து நடக்கும் மாளிகையில் ஏற்பாட்டின்படிக்கு, சுமார் எட்டரைமணிக்கு ஏகநாயகிச் சீமாட்டியும் அவள் தோழியாகிய ஜகதாளும் அங்குள்ள சிறு குடிசைக்குள் நுழைந்தபோது அங்கு யாருமில்லை. இரண்டொரு நிமிடங்கள் கழிந்ததும் மாறுவேடமணிந்த ஒருவன் அங்கு வந்ததும், ஏகநாயகியின் தோளைத்தொட்டு "ஆ! என் அன்பிற்குரிய சீமாட்டியே, உன்னை நீ யெழுதியபடியே உன் உடைகளா லறிந்துகொண்டேன். மிக்க ஆனந்தமடைந்தேன்" என்றான்.

சீமாட்டி:—"இங்கு பேசவேண்டாம். நாம் தோட்டத்திற்குள் செல்வோம்" என்றாள்.

அதன்பிறகு இருவரும் அவ்வாறே வேறிடத்திற்குச் சென்றபின் செல்லப்பப்பிரபு "ஆ என் அன்பே! நீ எழுதிய கடிதத்தைக்கண்டு நான் மிக்க கலவரமடைந்தேன். நடந்த சங்கதியென்ன? உன் கணவனுக்கு ஏதேனும் சந்தேகமுதித்ததோ? யாவும் விவரமாய்க்கூறு" என்றான்.

சீமாட்டி:—"தாங்கள் எழுதிய கடிதத்தைப் பிரபு பிரித்துப் பார்த்து சங்கதி யறிந்துகொண்டு மறுபடி யதை முன் போல் முத்திரையிட்டு என்னிடம் அனுப்பியதாய் நான் பூரணமாய்ச் சந்தேகங்கொள்ளக் காரணம் இருக்கிறது" என்று நடந்த சங்கதிகளையும், தான் தன் கணவனையே யேமாற்றி யவமானப்படுத்தச் செய்திருக்கும் தந்திரமான ஏற்பாட்டையும் யாவும் விபரமாய்க் கூறினாள்.

யாவும் கேட்ட செல்லப்பப்பிரபு "ஆ! இப்போது நீ கூறியதால் எனக்கு வந்த ஒரு கையொப்பமில்லாத கடிதத்தின் உளவை நானறிந்துகொண்டேன்..." என்றதும், சீமாட்டி "கடிதமா? என்ன கடிதம்?" என்பதற்குள் செல்லப்பப்பிரபு தன் ஜேபியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து, இதோ இக்கடிதமே பார்!" என்று அவள் காதிலளித்தான். சீமாட்டி யதை வாசித்தாள். அதில்,

"உனக்கு முக்கியமான ஒரு எச்சரிக்கை செய்கிறேன். அதாவது நீ இன்றிரவு வாதநாயகிச் சீமாட்டி வீட்டில் நடக்கும் மாறுவேட விருந்திற்குச் செல்லப்போகிறாய். அங்கு உன்னைக் கொலைசெய்ய சதியாலோசனை நடந்துகொண் டிருக்கிறது. ஆகையால் நீ யங்குசெல்லாமல் நின்று

விடுவதுதான் மிக்க நலம். அப்படி யவசியம் செல்லவேண்டியதாயின் நீ எண்ணியிருக்கிற மாறுவேடத்தை யணியாமல் சாதாரண உடையணிந்துச்செல். எச்சரிக்கை. ஓர் நண்பன்'' என்று வரைந்திருந்தது.

சீமாட்டி இக்கடிதத்தை வாசித்துக்கொண் டிருக்கையில் அவளருகிலிருந்த ஜகதாளும் அதைப் பார்த்தாள். தன் எஜமானி அதை வாசித்து முடிந்ததும் ஜகதாள் அவளை நோக்கி "சரி, சற்றும் சந்தேகமேயில்லை. இது நமது பிரபு எழுதியதே. செல்லப்பப்பிரபுவை யிங்கு வரவொட்டாமலே செய்துவிட்டு, தான் அவரைப்போல் வேடமணிந்து வந்து தங்களை யவமானப் படுத்தவேண்டும் என்ற எண்ணங்கொண்டே யிப்படிச் செய்திருக்கிறார். ஆயினும் அவர் முன்னமே தோல்வி யடைந்தார். இன்னும் பூராவாய் அவமானப்படப்போகிறார்'' என்றாள்.

சீமா:—"ஆம், ஆனால் நான் கடிதம் எழுதியிருக்கும் அம்மாது இங்கு வரவேண்டும். அவள்மட்டும் வந்துவிட்டால் நீ கூறியபடியே நடப்பது நிச்சயம்'' என்றாள்.

இதற்கிடையில் குமாரவேல்பிரபு என்ன செய்கிறார் என்று கவனிப்போம். அவர் ஒரு குதிரைப்படையின் உத்தியோகஸ்தர்போல் உடை யணிந்துகொண்டு அவ்விருந்திற்கு வந்திருந்தார். உண்மையில் ஜகதாள் கூறியபடி அவரே செல்லப்பப் பிரபுவுக்கு மேற்கண்ட எச்சரிக்கைக் கடிதத்தை எழுதியவர். எங்கு பார்த்தாலும் செல்லப்பப்பிரபு அவர் கண்களுக்குப் புலப்படவில்லை. தன் மனைவியும் அவள் தோழியும் தம் மாளிகையிலிருந்து புறப்பட்டதை யவர் பார்த்தார். ஆகையால் அவர்கள் ஏதாவது மாறுவேடமணிந்து வந்திருப்பார்களென்பதில் அவருக்குச் சற்றும் சந்தேகமேயில்லை.

இவை யாவும் சிந்தித்துக்கொண்டே பிரபு அலங்காரம் செய்யப்பட்ட அறைகளிலெல்லாம் பார்த்துக்கொண்டே கடைசியில் தோட்டத்தின் ஓரத்தில் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருந்த புஷ்பச் செடிகளின் மத்தியில் நுழைந்த போது எதிரில் ஒருஸ்திரீ வந்து தன்னைத்தொடவும் "இவள் நமது மனைவியே. நாம செல்லப்பப்பிரபு என்றே நம்பிக் கொண்டு நம்மைச் சந்தித்தாள்" என்று எண்ணிக்கொண் டார். அதற்குத் தகுந்தாற்போல் அம்மாது உடனே அவரை நோக்கி "ஏன் வீரரே! தங்கள் உடைவாளை யேது மறந்து பின்னால் வைத்துவிட்டீர்?" என்றாள்.

பிரபு உடனே "நான் ஒரு நாகரீகமான மாதைச் சந் திக்க எதிர்பார்க்கிறேன்" என்றார்.

அதன்பிறகு இருவரும் பேசத் தொடங்கினார்கள். பிரபு தான் செல்லப்பப்பிரபுவாயிருந்தால் முன் ஏற்பாட்டின் படி ஏகநாயகிச் சீமாட்டியிடம் எப்படிப் பேசுவாரோ அவ் வாறே யபிநயித்தார். அச்சமயம் சற்று தூரத்திலிருந்த செடிகளின் மறைவிலிருந்து மூன்று முகமூடி யணிந்த உரு வங்கள் இவர்களை யுற்று நோக்கிக்கொண்டே யிருந்தன. ஆனால் இவர்களோ அதைக் கவனிக்கவில்லை. இவர்கள் இருவரும் பேசத்தொடங்கியபோது குமாரவேல் பிரபு எதி ரில் முகமூடியுடன் தோன்றிய மாதின் கையை மெதுவாகப் பிடித்துக்கொண்டு, தன்னை ஏமாற்றுவதற்காகத் தன் மனைவி ஏகநாயகிச் சீமாட்டியே இவ்வாறு வேடந்தரித்து வந்திருக்கிறாள் என்று நினைத்து, "நேற்றிரவு இளவரசர் அரண்மனையில் நடைபெற்ற நாடகத்தின்போது நீ எவ் வளவு அழகுடையவளாய்க் காணப்பட்டாய்! உன் அருகில் உட்காரக்கூடிய சமயம் வாய்த்ததையே ஒருபெரும்பாக்கிய மாகக் கருதுகிறேன். அப்போது அடிக்கடி நீ சிரித்த புன்

சிரிப்புகளும், நீ காட்டிய ஜாடைகளும் என்மனத்தை அப்படியே கொள்ளைகொண்டன" என்றார்.

அப்போது முகமூடி யணிந்த அம்மாது—"அன்பரே! ஏன் இவ்வாறு என்னைப்பற்றி மிகைப்படப் புகழ்ந்து பேசுகின்றீர்கள்" என்றாள். எதிரில் நின்ற மாதின் குரல் தொனியையும் கண்டு பிடிக்க முடியாமல் குமாரவேல் பிரபு, "மிகைப்படப் புகழ்தலா! இல்லவே இல்லை. நான் உன்னைப் புகழ்ந்து பேசவில்லை. உள்ளதை உள்ளபடி கூறினேன். உன் அழகைப்பற்றிப் புகழவேண்டுமென்றாலும் அவ்வாறு செய்ய எந்தப்பாஷையில் தான் சொற்கள் இருக்கின்றன. உன் அழகு என்னை உன் அடிமையாக்கி விட்டது" என்றார்.

அம்மாது:—"தங்களுக்கு அவ்வளவு ஆர்வமிருந்தால் அதை மறைத்து வைக்கவும் முடிந்திருக்குமோ?"

பிரபு:–"இவ்வாறு உன் அழகைக்கண்டு மயங்கி உன்னிடம் அடிமைப்பட்டவர்கள் உன் கணவன் தவிர வேறு யாருமில்லை" என்று நிச்சயமாய்க் கூறுவாயா?

அம்:—காதலரே! நான் இதுவரை யாருடனும் இவ்வாறு பேசியதில்லை என்று உண்மையைக் கூறினாலும் அதைத் தாங்கள் நம்புவீர்களோ!

பிரபு:–அன்புள்ள மாதே! உன் வார்த்தையை நான் உடனே நம்பிவிட முடியாது. ஏனெனின், உன்னைப்போன்ற இவ்வளவு அழகுடைய ஒருமாது, இந்நகரில் நிரம்பிக் கிடக்கும் காமுகர்களின் வலையில் சிக்கிக்கொள்ளாமல் தப்பித்துக் கொள்வது மிகக்கஷ்டமே; ஆதலின் கணவன் அன்றி உனக்கு வேறு யாரேனும் கள்ளக்காதலர் உண்டோ என்பதை உண்மையாகக் கூறு.

186550

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 3-பாகம் விலை ரூபா 6

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலியுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
3-பாகமும் ...	6	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	ரத்தினாபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம்...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.